பக்கங்கள் : எட்டு

# உதயன்

Registered as a Newspaper

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 22 வள்ளுவர் ஆண்டு 2038 ஆனி 21 வியாழக்கிழமை (05.07.2007) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 218

# கனடாவின் அரச பிரதிநிதி அலுவலகத்தை யாழ்ப்பாணத்தில் திறக்க வற்புறுத்து

## அந்நாட்டு எம்.பி. பிரதமருக்குக் கடிதம்


ஸ்ரீபன் ஹார்பர்


டான் மக்ரியாகு

ஒட்டாவா,ஜூலை5

**யாழ்ப்பாணக் குடாநாட்டில், கனடாவின் அரச உப பிரதிநிதி - கவுன்சிலர் - அலுவலகம் ஒன்றை அமைக்குமாறு நாடாளுமன்ற உறுப்பினர் டான் மக்ரியாகு, பிரதமர் ஸ்ரீபன் ஹாப்பரிடம் வலியுறுத்தியுள்ளார்.**

கொழும்பில் உள்ள கனேடியத் தூதரகத்திற்குச் சென்று வருவதில், அதன் பொருட்டுக் கொழும்பில் தங்கி நிற்பதில் குடாநாட்டுத் தமிழ் மக்கள் பெரும் கஷ்டங்களையும் இன்னல்களையும் அனுபவித்து வருகின்றனர். ஆகையால் யாழ்ப்பாணத்தில் கனேடிய கவுன்சிலர் அலுவலகம் ஒன்றைத் திறந்தாக வேண்டும் என்று மக்ரியாகு பிரதமருக்கு அனுப்பிவைத்த கடிதத்தில் கேட்டுள்ளார்.

இலங்கை அரசாங்கம் தமிழ் மக்களை இனச்சுத்திகரிப்புச் செய்கிறது. தமிழர்களை நசுக்குகிறது. தமிழ் மக்களைத் திட்டமிட்டு தலைநகர் கொழும்பிலிருந்து வெளியேற்றுகிறது.

மனித உரிமைகளை மதித்து அவற்றைப்

(08ஆம் பக்கம் பார்க்க)

## வெளிவிவகார அமைச்சர் நாராயணனுடன் சந்திப்பு

கொழும்பு,ஜூலை5

இலங்கை வெளிவிவகார அமைச்சர் ரோஹித போகொல்லாகம நேற்றுமுன்தினம் இரவு இந்திய தேசியப் பாதுகாப்பு ஆலோசகர் என்.கே.நாராயணனைச் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளார்.

அமைச்சர் ரோகித போகொல்லாகம நேபாளத்தின் தலைநகரான காத்மண்டில் இருந்து இலங்கை திரும்பும் வழியில் இந்தியாவின் புதுடில்லிக்குச் சென்றார். அங்கு சென்ற அவர் என்.கே.நாராயணனைச் சந்தித்துப் பேச்சுகளில் ஈடுபட்டார்.

இச்சந்திப்பின்போது இலங்கையின் தற்போதைய நிலைவரம், அதிகாரப் பகிர்வுக்காக இலங்கை அரசு மேற்கொண்டு வரும் முயற்சிகள் மற்றும் கிழக்கு மாகாணத்தில் மோதல்கள் காரணமாக இடம்பெயர்ந்த மக்களை மீளக்குடியமர்த்தும் பணிகள் குறித்து அமைச்சர் போகொல்லாகம நாராயணனிடம் எடுத்து விளக்கினார்.

இலங்கையின் இனப்பிரச்சினைக்கு சுமுகத்தீர்வுகளைக் காண இந்தியா தன்னால்

(08ஆம் பக்கம் பார்க்க)

## கண்காணிப்புக் குழுத் தலைவர் நேற்று புலித்தேவனுடன் சந்திப்பு

### தற்போதைய நிலை குறித்து ஆராய்ந்தனர்

கிளிநொச்சி,ஜூலை5

அரசுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான யுத்தநிறுத்த உடன்படிக்கையை நடைமுறைப்படுத்துவது தொடர்பாக யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் லார்ஸ் ஜொகான் சொல்பேர்க் விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளுடன் நேற்று ஆராய்ந்தார்.

வவுனியாவுக்கு வந்த அவர் ஏ-9 பாதையூடாக - ஓமந்தை சோதனை நிலையம் ஊடாக - நேற்றுப் பிற்பகல் கிளிநொச்சி வந்து சேர்ந்தார்.

கிளிநொச்சியிலுள்ளதங்களது கண்காணிப்பு

(08ஆம் பக்கம் பார்க்க)

## கரும்புலிகள் நாளை ஒட்டி நேற்று குடாநாட்டில் சோதனை தீவிரம்

யாழ்ப்பாணம்,ஜூலை5

குடாநாட்டில் நேற்றுப் பெரும் எடுப்பில் சோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

படையினரும் பொலிஸாரும் இணைந்து இந்தச் சோதனை நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்.

நேற்றுக்காலை ஆரம்பமான இந்தச் சோதனை நடவடிக்கைகள் மாலை வரை நீடித்தன.

இன்று கரும்புலிகள் தினம். அதனையொட்டித் தமிழீழ விடுதலைப்புலிகள் தாக்குதல் எதையும் நடத்தக்கூடும் என்ற எதிர்பார்ப்பில் நேற்றுக் குடாநாடு முழுவதும் பெரும் எடுப்பில் சோதனை நடவடிக்கைகள் முடுக்கிவிடப்பட்டிருந்தன.

குடாநாட்டின் சகல பிரதான வீதிகள் மற்றும் உள்வீதிகள் உட்பட அனைத்து வீதிகளிலும் நேற்று அதிகாலை முதல் பெரும் எண்ணிக்கையான படையினரும், பொலிஸாரும் குவிக்கப்பட்டிருந்தனர்.

அத்துடன், பிரதான இராணுவ முகாம்களின் பாதுகாப்பும் பலப்படுத்தப்பட்டிருந்தது.

வீதிகளில் நிறுத்தப்பட்டிருந்த படையினர் வீதியில் பயணம் செய்த பொது மக்களை தீவிர சோதனைக்குட்படுத்தினர். மோட்டார் சைக்கிள் உட்பட அனைத்து வாகனங்களும் சோதனைக்குட்படுத்தப்பட்டன.

(08ஆம் பக்கம் பார்க்க)

# கிழக்கில் அரசின் சாதனைகள் இன்னும் எவ்வளவு காலத்துக்கு?

## பொறுத்திருந்து பார்ப்போம் என்கிறார் இளந்திரையன்



கொழும்பு,ஜூலை 5

கிழக்கில் சாதிப்பதாக ஸ்ரீலங்கா சொல்லும் விடயம் எவ்வளவு காலம்தான் நீடிக்கும் என்பதை பொறுத்திருந்து பார்ப்போம். - இவ்வாறு தமிழீழ விடுதலைப் புலிகளின் இராணுவப் பேச்சாளர் இராசையா இளந்திரையன் தெரிவித்துள்ளார்.

ஆஸ்திரேலிய தமிழ் ஒலிபரப்புக் கூட்டுத்தாபன வானொலியில் (ATBC) செவ்வாய்க்கிழமை ஒலிபரப்பாகிய ''செய்தி அலைகள்'' நிகழ்ச்சிக்கு அவர் அளித்த செவ்வியில் கூறியுள்ளதாவது:-

கிழக்குப் பகுதி என்பது ஒரு வித்தியாசமான தரையமைப்பைக் கொண்ட தனித்துவமான நிலம். கெரில்லா வகை போராளிகளின் தாய்மடியாகும். கடந்த 25வருட காலமாக அங்கு எங்களுடைய படைகள் பல நடவடிக்கைகளைக் கரந்தடிப்படையாக மேற்கொண்டு வருகின்றன. குடுமிமலை உள்ளிட்ட கிழக்குப் பகுதியில் ஸ்ரீலங்கா இராணுவம் செறிவாக - பரவலாக - இருப்பது உண்மைதான். அவர்களுடைய நடமாட்டம் அதிகம்தான். ஆனால், யார் கட்டுப்பாட்டை இழக்கிறார்கள் - கட்டுப்பாட்டுக்குள் எடுக்கிறார்கள் என்கிற விடயத்துக்குள் இவை சிக்குப்பட்டுவிட முடியாது.

கிழக்கில் யாருடைய செயற்பாட்டுத் திறனைக் கட்டுப்படுத்த முடிகிறதோ அவரது

(07ஆம் பக்கம் பார்க்க)

## குடுமிமலையில் குண்டுவீச்சு

கொழும்பு,ஜூலை5

மட்டக்களப்பு - குடுமிமலைப் பகுதியில் நேற்று விமானப்படையினர் தாக்குதலை மேற்கொண்டனர் என்று இராணுவப் பேச்சாளர் பிரசாத் சமரசிங்க தெரிவித்திருக்கிறார்.


விமானப்படையினருக்குச் சொந்தமான 'கிபிர்' விமானங்கள் விடுதலைப் புலிகளின் 4 நிலைகள் மீது தாக்குதல் நடத்தின. இருப்பினும், சேதவிவரங்கள் எவையும் தெரியவரவில்ல.

இதேவேளை, இந்தத் தாக்குதல் தொடர்பாக விடுதலைப்புலிகள் தரப்பிலிருந்து எந்தத் தகவல்களும் வெளிவரவில்லை.(சி)

# துணிச்சலான தீர்ப்புகளுக்காக பிரதம நீதியரசருக்கு நன்றி!

## தமிழ் மக்கள் சார்பில் சிறிகாந்தா எம்.பி. தெரிவிப்பு





கொழும்பு,ஜூன்5

நாட்டின் நிர்வாகத்துறை உறங்கிக்கொண்டிருக்கும் போது நீதித்துறை ஒன்றையே மக்கள் முற்றும் முழுதாக நம்பி உள்ளனர். இக்கட்டான சூழ்நிலையில் பிரதம நீதியரசர் துணிச்சலுடன் வழங்கிய தீர்ப்புகளுக்கு தமிழ் மக்களின் சார்பில் தலைவணங்குகின்றேன்.

- இவ்வாறு பிரதம நீதியரசருக்கு நன்றி தெரிவித்தார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் என். சிறிகாந்தா.

நீதித்துறையை மேம்படுத்தும் வகையில் மேல்நீதிமன்ற நீதிபதிகளின் எண்ணிக்கையை 40 இல் இருந்து 60 ஆக அதிகரிக்கும் நீதித்துறை திருத்தச்சட்ட மூலம் தொடர்பான விவாதத்தில் உரையாற்றும்போதே சிறிகாந்தா இப்படிக் கூறினார்.

இன்று சட்டத்தையும் ஒழுங்கையும் பாதுகாக்க வேண்டியவர்களே சட்டவிரோத நடவடிக்கைகளுக்குத் துணைபோகின்றனர். இதனை நிர்வாகத்துறை கண்டும் காணாமல் இருக்கின்றது.

இப்படியான நிலையில் நீதித்துறையின் தலையீடு மிகமிக அத்தியாவசியமாகின்றது. தலைநகரில் இருந்து தமிழ் மக்கள் வலுக்கட்டாயமாக வெளியேற்றப்பட்டபோது உயர்நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு துணிச்சலானது மட்டுமல்ல

(08ஆம் பக்கம் பார்க்க)

## குடும்பத்துடன் கோத்தபாய அமெரிக்கா பயணமானார்!

கொழும்பு,ஜூலை5

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ இருவார காலப் பயணம் மேற்கொண்டு அமெரிக்கா சென்றுள்ளார்.

அவர் தனிப்பட்ட பயணமாக குடும்பத்ினருடன் அமெரிக்கா சென்றுள்ளார் என்று அதிகார வட்டாரங்கள் தெரிவித்தன.

இலங்கை அரசியலில் சர்ச்சைக்குரியவராகக் கருதப்படும் பாதுகாப்பு அமைச்சின் (08ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ்க் கூட்டமைப்புக் குழு இன்று சுவீடனுக்கு விஜயம்

கொழும்பு,ஜூலை5

ஐரோப்பிய சுற்றுப் பயணத்தின் ஒரு கட்டமாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழு இன்று சுவீடன் செல்கின்றது.

அங்கு அவர்கள் சுவீடன் வெளிவிவகார அமைச்சின் தெற்காசியப் பிராந்தியத்திற்கான உதவித் தலைவர் கிளாஸ் மொறினைச் சந்திக்கவுள்ளனர்.

கடந்த திங்கட்கிழமை (08ஆம் பக்கம் பார்க்க)

## கடத்தல்கள், கப்பம் கோரலுடன் கைதான 14 பேரில் 4 பொலீஸ், 1 சிப்பாய்!

கொழும்பு, ஜூலை 5

தொடர்ச்சியான ஆட்கடத்தல்கள், கப்பம் கோரல் ஆகியவை தொடர்பாக பொலிஸாரால் 16 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்களில் நான்கு பொலிஸார், விமானப்படை சிப்பாய் ஒருவர் ஆகியோரும் அடங்குவர் என்று பொலிஸ் வட்டாரங்களை மேற்கோள்காட்டி 'ரொய்ட்டர்' நேற்றுத் தெரிவித்தது.

இது தொடர்பாக இராணுவப் பேச்சாளரும் அரச அமைச்சருமான கெஹலிய ரம்புக்வெல்ல செய்தியாளர் சந்திப்பொன்றில் விளக்கினார். (08ஆம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொது சுகாதாரப் பரிசோதகர்கள் - ஆட்சேர்ப்பு

## வட மாகாண சுகாதாரத் திணைக்களத்தின் பொது சுகாதார பரிசோதகர் பதவிக்கான ஆட்சேர்ப்பு - 2007

வடமாகாணத் சுகாதாரத் திணைக்களத்தில் நிலவும் பொதுசுகாதார பரிசோதகர் பதவிக்கான ஆளணி வெற்றிடங்களை நிரப்பும் பொருட்டு இலங்கைப் பிரஜைகள் ஆண்களிடமிருந்து பின்வரும் தகைமைகளுடன் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்ப முடிவு திகதி 19.07.2007.

1) **கற்கை பயிற்சிக்காலம்:** 1½ வருடங்கள் (வெளிக்களப் பயிற்சி 6 மாதங்கள் உள்ளடங்கலாக)
2) **வயது எல்லை:** 31.12.2006ஆம் திகதிக்கு 18 வயதிற்கு குறையாமலும் 30 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல்வேண்டும்.
3) **கல்வித் தகைமைகள்:** க.பொ.த (உயர்தரம்) விஞ்ஞானம் ஒரே தடவையில் மூன்று பாடங்கள் சித்தியடைந்திருப்பதுடன் உயிரியல் அல்லது விலங்கியல் பாடத்தில் திறமைச்சித்தி பெற்றிருக்கவேண்டும்.
4) வடமாகாணத்தின் எப்பாகத்திலும் கடமைபுரியத் தயாராக இருக்கவேண்டும்.
5) நல்ல உடல் ஆரோக்கியமுடையவராக இருத்தல்வேண்டும்.
6) 3 வருடங்கள் குடியிருப்பதை உறுதிப்படுத்தி வாக்காளர் இடாப்பு பிரதி இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். விண்ணப்பதாரியின் பெயர் வாக்காளர் இடாப்பில் பதிவுசெய்யப்படாத பட்சத்தில் அப்பகுதி கிராமசேவகரால் 3 வருடங்கள் குடியிருப்பதை உறுதிப்படுத்தி அத்தாட்சிப் பத்திரம் இணைத்து அனுப்பப்படல் வேண்டும்.
7) பயிலுநர்கள் பயிற்சியை இடைக்காலத்தில் இடைநிறுத்தினால் பயிற்சி செலவுகள் முழுவதையும் பயிலுநர் செலுத்தவேண்டும்.

மேற்படி ஆட்சேர்ப்புக்கான விண்ணப்பங்களை ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள பிராந்திய சுகாதார சேவை பணிப்பாளர் பணிமனையிலும் சகல சுகாதார வைத்திய அதிகாரிகள் பணிமனையிலும் பெற்றுக்கொள்ளலாம்.

விண்ணப்பங்களை உரிய முறையில் பூர்த்திசெய்து மேலுறையின் இடதுபக்க மேல் மூலையில் **"பொதுசுகாதார பரிசோதகர் பதவிக்கான ஆட்சேர்ப்பு - 2007" எனக் குறிப்பிட்டு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர், ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்** என்ற முகவரிக்கு 19.07.2007ஆம் திகதிக்கு முன்னதாக கிடைக்கத்தக்கவாறு பதிவுத் தபாலில் அனுப்பிவைக்கவும். 19.07.2007ஆம் திகதிக்கு பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

இலங்கை நிர்வாக சேவை, கல்விச் சேவை/கணக்காளர் சேவை/ மருத்துவ சேவை உத்தியோகத்தர்கள் அல்லது அரசாங்க பாடசாலை அதிபர்/சட்டத்தரணி ஒருவரினால் விண்ணப்பதாரியின் கையொப்பம் உறுதிப்படுத்தப்பட்டிருத்தல்வேண்டும்.

**வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன்,**
**பிராந்திய பணிப்பாளர், சுகாதார சேவைகள்,**
**யாழ்ப்பாணம்.** (சி/52829)

### விவசாய உபகரணம் வழங்கும் நிகழ்வு

யாழ்ப்பாணம், ஜூலை 5

சொலிடார் நிறுவனத்தின் அனுசரணையுடன் விவசாயத் திணைக்களத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்டுவரும் பெறுமான அதிகரிப்பு நடவடிக்கைகளுக்கான உபகரணம் வழங்கும் வைபவம் இன்று முற்பகல் 10 மணிக்கு திருநெல்வேலி விவசாயப் பயிற்சி நிலையத்தில் இடம்பெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாண அரச அதிபர் கே. கணேஸ் கலந்து கொள்வார். (1)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தாயின் மடியில்
10 ★ 06 ★ 1990



ஆண்டவன் மடியில்
15 ★ 07 ★ 2006

### அமரர் சிங்கராசா அர்ஜன்

**திதி: திருதியை (05.07.2007)**

கனவோ! இது நனவோ!
மகனே உன் இழப்பை
காலம் உருண்டோடி
ஆண்டு ஒன்று ஆகியும்
உன் நினைவு எம்மை
விட்டு அகலவில்லை.

**கைதடி மேற்கு,**
**கைதடி.** (62450)

தகவல்:
**பெற்றோர், சகோதரர்கள், அம்மம்மா.**

## மரண அறிவித்தல்



### *சின்னத்தம்பி தங்கப்பொன்னு*

அம்பனை, தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும் தற்போது 'லட்சுமி வாசா' ஏழாலை மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி தங்கப்பொன்னு நேற்று (04-07-2007) புதன்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பியின் அன்பு மனைவியும், செல்வராணி (சிங்கப்பூர்), ஜெயசோதி, சிவனேசன் (சிங்கப்பூர்), சற்குணசிங்கம் (சிறிநதியா) ஆகியோரின் அன்புத் தாயும் நவரட்ணம் (சிங்கப்பூர்), மேரி, ராதா ஆகியோரின் அன்பு மாமியும் நிஷாந்த் (ஹைய் ரெக், எலக்ரோனிக்ஸ் அன் போன்சொப் - சுன்னாகம்), சுரேன் (தொழில் நுட்பக்கல்லூரி மாணவன்) நிரோசன், மோகன், உஷா, குமார், கண்ணன், ரஞ்சன், ரவி, வரோனிக்கா (சிங்கப்பூர்) ஆகியோரின் பேத்தியும் காலஞ்சென்றவர்களான அப்புத்துரை, பொன்ராசா, சொர்ணம், பொன்னம்மா மற்றும் பொன்னுத்துரை ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05-07-2007) வியாழக்கிழமை அவரது இல்லத் தில் பிற்பகல் ஒரு மணிக்கு நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக ஏழாலை மேற்கு, உசத்தியோடை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**"லட்சுமி வாசா", ஏழாலை மேற்கு, ஏழாலை.** (62462)

தகவல்:
***சி.சற்குணசிங்கம்*** (மகன்).

## ஓராண்டு நினைவலையில்

மலர்வு
27 ★ 03 ★ 1922



உதிர்வு
15 ★ 07 ★ 2006

### திருமதி சிவஞானபூரணி வைத்தியலிங்கம்

*நின்ற இடமெங்கும் நீக்கமறக் கலந்தீர்*
*எண்ணற்கினிய அமுதக் கடலாழம்*
*ஏற்றுமன்புத் தண்மையினில் புகழாரம்*
*கண்ணிற்கினிய கருணை மழைக் கனிவில்*
*கார்முகிலாய்க் கனிரசமாய் கவினழகுப் பொக்கிசமாய்*
*மண்ணிற்கினிய சிவஞானம் மகிழ்ந்தேத்தும் பூரணியாய்*
*மானிடத்தின் துயர் துடைக்குமட்சய பாத்திரம்*
*பண்ணிற்கினிய சுரம் பக்குவமாயூட்டி வளர்த்த தெய்வம்*
*பாரெல்லா மழுதரற்ற பார்வைமறைந் தோராண்டு*
*விண்ணிற்கினிய விருந்தானீர் வித்தையெல்லாம்*
*நாம் நினைக்கில்*
*விழுதின்றியேறும் மனத்தேறலேதம்மா*
*புண்ணியத்தின் வித்தே பூவிதழின் தென்றலுமாய்*
*நின்ற இடமெங்கும் நீக்கமறக் கலந்தீர்.*

**ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!**

*110, பிறவுண் வீதி,*
*யாழ்ப்பாணம்.* (சி/52830)

**என்றும் உங்கள் நினைவுகளுடன்:**
**மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

## மரண அறிவித்தல்

### *சிவபாதசுந்தரம் கருணாதேவி*

அராலி வடக்கைச் சேர்ந்த சிவபாதசுந்தரம் கருணாதேவி 02-07-2007 திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்துவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 05-07-2007 வியாழக்கிழமை காலை 9.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் அராலிவடக்கு இந்து மயானத்தில் தகனஞ் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*அராலி வடக்கு,*
*அராலி.* (62461)

தகவல்:
**குடும்பத்தினர்.**


## அபிவிருத்தி அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

895

வெற்றி இலக்கங்கள்

துலாம் 32 33 42 45

03-07-2007

செல்லுபடியாகும் தொடர் இல. 4136423 - 4151239

ஜக்பொட் பரிசு ரூபா.5,343,050/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 322,237 | 10/- | 3,222,370/- |
| 2 இலக்கங்கள் | 29,641 | 20/- | 592,820/- |
| 1 இல. + லக்கினம் | 29,317 | 30/- | 879,510/- |
| 2 இல. + லக்கினம் | 2,709 | 100/- | 270,900/- |
| 3 இலக்கங்கள் | 804 | 500/- | 402,000/- |
| 3 இல. + லக்கினம் | 71 | 5,000/- | 355,000/- |
| 4 இலக்கங்கள் | 4 | 100,000/- | 400,000/- |
| 4 இல. + லக்கினம் | - | 5,343,050/- | - |
| மொத்தம் | | | 6,122,600/- |
| முச்சக்கர வண்டிகளின் பெறுமதி | 5 | 204,700/- | 1,023,500/- |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | 384,788 | | 7,146,100/- |

இந்த வெள்ளிக்கிழமை சுப்பர் பரிசுத் தொகை ரூபா 5,703,050/-

அபிவிருத்தி அதிர்ஷ்டம் சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுக்களில் முச்சக்கரவண்டி வெற்றி பெறும் ஐந்து டிக்கட்டுக்களின் தொடர் இலக்கங்கள்

| | |
|---|---|
| குருநாகல் | 4137039-3-47 |
| பதுளை | 4137795-6-02 |
| பொலன்னறுவை | 4137472-4-61 |
| திருகோணமலை | 4142365-8-31 |
| மட்டக்களப்பு | 4145699-9-60 |

வளமான வாழ்விற்கு

அபிவிருத்தி லொத்தர் சபை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நவாலிக் கடலோரத்தில் மண் அகழ்வு தீவிரம்; வெள்ள நீர் குடிமனைக்குள் புகும் அபாயம்

நவாலி ஜூலை 5

கல்லுண்டாய் நவாலி கடற்கரைப் பகுதியில் ஊரி மண் அகழ்வு தற்போது தீவிரமாகியுள்ளது. இதனால் பிரதேசத்தின் வயல் காணிகளுக்குள்ளும் குடிமனைகளுக்குள்ளும் கடல் நீர் புகும் அபாயம் உள்ளது என பிரதேச மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

பிரதேசக் கடற்பரப்பில் சிலர் ஊரி மண்ணை அகழ்ந்து தமது வளவுகளில் சேமித்து வருகின்றனர். இந்த அகழ்வு நடவடிக்கையால் கடல் நீர் - உவர்நீர் வயல்களுக்குள் புகும் அபாயம் ஏற்பட்டுள்ளது. இதன் மூலம் விவசாய நடவடிக்கைகளில் பாதிப்பு ஏற்படலாம் எனச் சுட்டிக் காட்டப்படுகின்றது.

வளவுகளில் சேகரிக்கப்படும் ஊரி மண் அதிக விலைக்கு வெளியாருக்கு விற்கப்படுவதாகக் கூறப்படுகின்றது.

(202-100)

# குடாநாட்டு மக்களுக்கென மீண்டும் விரைவு தந்திச் சேவை ஆரம்பம்

நல்லூர், ஜூலை5

இலங்கையின் சகல பாகங்களுக்கும் 2 மணி நேரத்தில் கிடைக்கக் கூடியதான விரைவு தந்திச் சேவை (ரெலி மெயில் சேவிஸ்) குடாநாட்டில் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக யாழ்.பிரதம தபாலக அதிபர் கே.துரைசிங்கம் தெரிவித்தார்.

விரைவு தந்திச் சேவையின் ஊடாக அனுப்பப்படும் தகவல் 2 மணித்தியாலங்களில் குறிப்பிட்ட விலாசதாரருக்கு கிடைக்கும்.

முதல் 10 சொற்களுக்கு 30 ரூபாவும் அடுத்து வரும் ஒவ்வொரு சொல்லுக்கும் ஒரு ரூபா 50சதமும் அறவிடப்படும் எனவும் - பொதுமக்கள் தமது தகவல்களைத் தாமதமின்றி அனுப்பிவைக்க இந்த விரைவு தந்திச் சேவை பயனுள்ளதாக இருக்கும் எனவும் பிரதம தபாலதிபர் கூறினார்.

## கோழித்தீன் பெற்றுக்கொடுக்க சங்கம் ஏற்பாடு

யாழ்ப்பாணம், ஜூலை 5

தென்மராட்சி பிரதேசத்திலுள்ள கோழி வளர்ப்பாளர்களுக்கு கோழித்தீவனத்தைப் பெற்றுக் கொடுக்க தென்மராட்சி கால்நடை வளர்ப்போர் சங்கம் ஏற்பாடுகள் மேற்கொண்டுள்ளது. கோழித்தீவனம் தேவைப்படுவோர் சாவகச்சேரியில் உள்ள சங்க அலுவலகத்தில் தமக்குத் தேவையான கோழித்தீவனத்திற்குரிய தொகையை முற்பணமாகச் செலுத்துமாறு சங்கத்தினர் கேட்டுள்ளனர்.

தென்பகுதியில் இருந்து கப்பலில் கால்நடை த்தீவனம், கோழித்தீவனம் என்பவை கொண்டுவரப்பட்டுள்ளன.

(202-207)

## கிணற்றைப் புனரமைத்துத் தருமாறு கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 5

முள்ளானை சூரியன் கலட்டி மயானத்தின் கிணறு பாழடைந்துள்ளது. அதனை புனரமைத்துத் தருமாறு வலி.தென்மேற்கு பிரதேச சபையிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கலைவாணி சனசமூக நிலைய ஆலோசகர் வை.செகராஜசிங்கம் பிரதேச சபைச் செயலாளரிடம் கடிதம்மூலம் இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளார்.

சித்திரமேளி, இளவாலை, தும்மலை, காடிவளை, பத்தாவத்தை, அளவெட்டி வடக்கு பிரதேச மக்களும் இந்த மயானத்தையே பயன்படுத்தி வருகின்றனர்

மக்களின் தேவையைக் கருத்தில் கொண்டு கிணற்றைப் புனரமைத்துத் தருமாறு அந்தக் கடிததத்தில் கோரப்பட்டுள்ளது. (202-95)

## மாரீசன் கூடல் வீதி புனரமைப்பு

வலி தென்மேற்கு, ஜூலை 5

மாதகல் விவசாயிகள் சம்மேளனம் பாலகட்டை - மாரீசன் கூடல் விவசாய வீதியை புனரமைப்பு செய்துவருகின்றது.

சர்வதேச கெயர் நிறுவனம் இதற்கென 7 இலட்சத்து 31ஆயிரம் ரூபாவை சம்மேளனத்திற்கு வழங்கியுள்ளதாக மாதகல் விவசாயிகள் சம்மேளனத்தின் தலைவர் வி.சிற்றம்பலம் தெரிவித்தார். நீண்டகாலமாக பற்றைகள், செடிகள் வளர்ந்து தூர்ந்து போயிருக்கும் இந்த வீதியைத் திருத்துவதன் மூலம் இப்பகுதி விவசாயிகள் நன்மையடைவார்கள் என்றும் தெரிவித்தார். (202-135)

## நியாப் திட்டத்தின் கீழ் சில்லாலையில் வீதி புனரமைப்பு

வலி.தென்மேற்கு, ஜூலை 5

சில்லாலை தெற்கு கிராம அலுவலர் பிரிவிலுள்ள உந்துசாந்தை வீதி நியாப் திட்டத்தின் கீழ் புனரமைப்பு செய்யப்படவுள்ளது.

கடந்த 2006ஆம் ஆண்டில் சில்லாலை தெற்கு கிராம அலுவலர் பிரிவு நியாப் திட்டத்தின் கீழ் மாதிரிக் கிராமமாக அபிவிருத்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. இதற்கமைய இங்கு பொதுநோக்கு மண்டபம் ஒன்று நிர்மானிக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இத் திட்டத்தின் கீழ் மேற்படி வீதியை விரைவில் புனரமைப்பு செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாக சில்லாலை தெற்கு கிராம அபிவிருத்தி சங்கத் தலைவர் தெரிவித்தார். (202-135)

# தென்மராட்சிப் பிரதேசத்தின் போசாக்கான குழந்தைகளுக்கு பரிசில் பொதிகள்

யாழ்ப்பாணம், ஜூலை5

தென்மராட்சி பிரதேசத்தில் போசாக்கு நிறைந்த 84 குழந்தைகளுக்கு பரிசில்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் போசாக்கு மாதம் அனுஷ்டிக்கப்பட்டது . இதனையொட்டி போசாக்கு நிறைந்த 6 மாதத்திற்கும் ஒரு வயதிற்கும் இடைப்பட்ட குழந்தைகள் குடும்பநல சேவையாளர் பிரிவுகளில் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்கு பரிசில்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

ஒவ்வொரு குடும்பநல சேவையாளர் பிரிவுகளிலும் 6 மாதத்திற்கும் ஒரு வயதுக்கும் இடைப்பட்ட குழந்தைகளின் தாய்மாருடன் குழந்தை பராமரிப்பு தொடர்பாக நேரடியாக ஆய்வு செய்யப்பட்டு அந்த ஆய்வின் அடிப்படையில் பரிசில்கள் வழங்கப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

பிரதேசத்தில் உள்ள 28 குடும்பநல சேவையாளர் பிரிவுகளில் நடத்தப்பட்ட ஆய்வுகளில் தெரிவு செய்யப்பட்ட குழந்தைகளுக்கு பரிசில்கள் வழங்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

பிரதேசத்தில் உள்ள மகளிர் கிராம அபிவிருத்திச் சங்கங்கள், விளையாட்டுக் கழகங்கள், சனசமூக நிலையங்கள், சமுர்த்தி கழகங்கள் ஆகியவற்றுடன் சாவகச்சேரி லயன்ஸ் கழகம், ஊற்று, சிறுவர் பாதுகாப்பு நிதியம், யுனிசெப், சோஆ, சேவாலங்கா ஆகிய நிறுவனங்கள் இத் திட்டத்திற்கு உதவிகளை வழங்கியுள்ளன.

போசாக்கு மாத திட்டத்தின் கீழ் வரணி, மட்டுவில்தெற்கு, மட்டுவில் வடக்கு ஆகிய பகுதிகளில் ''போசாக்கு உணவும் குழந்தையின் வளர்ச்சியும் விருத்தியும்'' என்னும் கண்காட்சி நடத்தப்பட்டதாகவும் ஏனைய பிரிவுகளிலும் கண்காட்சி நடத்தப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

(202-207)

## ஜீ.சி.ஈ.சாதாரண தர பரீட்சைக்கு விண்ணப்பங்கள்

யாழ்ப்பாணம், ஜூலை 5

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் ஜீ.சி.ஈ. சாதாரணதரப் பரீட்சைக்கு இவ்வருடம் விண்ணப்பிக்கும் பாடசாலை மாணவர்களுக்கான விண்ணப்பப்படிவங்கள் வலயக் கல்வி அலுவலகத்திற்கு வந்துள்ளன.

பாடசாலை அதிபர்கள் இப்படிவத்தினை வலயக் கல்வி அலுவலக திட்டமிடல் பிரிவில் பெற்றுக் கொள்ளுமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் கேட்டுள்ளார். (202-207)

## நயினாதீவில் வாழ்வாதாரக் கடன் உதவிகள்

நல்லூர், ஜூலை 5

நயினாதீவு தெற்கு கிராம அலுவலர் பிரிவில் நியாப் II திட்டத்தின் கீழ் சுழற்சிக் கடன் அடிப்படையில் 10 பேருக்கு வாழ்வாதாரக் கடன் உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

தலா 30 ஆயிரம் ரூபா வீதம் இக்கடன் வழங்கப்பட்டுள்ளது.

அண்மையில் நடைபெற்ற கடன் வழங்கும் நிகழ்வில் வேலணை பிரதேச செயலர் மு.நந்தகோபால் தேர்ந்தெடுக்கபட்டவர்களுக்குக் கடன்களை வழங்கினார்.

நிகழ்வில் நயினாதீவு தெற்கு கிராம அலுவலர் எஸ்.குலசிங்கம், மாதர் சங்கப் பிரதி நிதிகள், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (202-111)

## பாதுகாப்புக்காக பனங்குற்றிகள் நாட்டப்படுகின்றன

நல்லூர், ஜூலை 5

வேலணை, புங்குடுதீவு அம்பலவாணர் பாலத்தில் பாதுகாப்புக் கருதி பனங்குற்றிகள் நாட்டப்படுகின்றன.

குறிப்பிட்ட பாலத்தில் பாதுகாப்பான பயணத்தை மேற்கொள்ளத்தக்க வகையில் பாலத்தின் கிழக்குப் பகுதியோரத்தில் இந்தப் பனங்குற்றிகள் நாட்டப்படுகின்றன. (202-111)

# அல்லைப்பிட்டி அகதிகளுக்கு சுகவாழ்வு நிறுவனம் உதவி

யாழ்ப்பாணம்,ஜூலை 5

அல்லைப்பிட்டியிலிருந்து இடம்பெயர்ந்து யாழ்.நகரின் முகாம்களில் வாழும் மக்களின் உளநெருக்கீடுகளை நீக்கும் வகையிலான செயற்பாடுகளை சுகவாழ்வு நிறுவனம் முன்னெடுத்து வருகின்றது.

இது தொடர்பாக அந்நிறுவனம் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது - கதீஜா முஸ்லிம் பாடசாலையில் தங்கியுள்ள மக்களுக்கு உளவளத்துணை வழங்கப்பட்டதுடன் அவர்களுக்கு சுயதொழில் ஊக்குவிப்பிற்கென பன்ன வேலைக்கான மூலப்பொருள்களும் வழங்கப்பட்டன.

மேலும் தொழில் மேம்பாட்டுக்கான வாழ்வாதாரக் கடன் வழங்கப்பட்டதுடன் பயிற்சிப் பட்டறையும் நடத்தப்பட்டது. யாழ். அடைக்கல அன்னை ஆலயம், நாவாந்துறை கதீஜா முஸ்லிம் பாடசாலை, சென்.நீக்கிலஸ் ஆகிய நலன்புரி நிலையங்களில் இடம்பெயர்ந்து தங்கியுள்ள மக்களுக்கு தொடர்ந்தும் பல்வேறு உதவிகளை நிறுவனம் வழங்கி வருகின்றது. - என்றுள்ளது.

(202)

# குடாநாட்டு முதியவர்களுக்கு அ.அட்டை இல்லை தேவைகளை நிறைவேற்றுவதில் சிரமம்

கரவெட்டி, ஜூலை5

குடாநாட்டில் முதியோர்களுக்கான அறிமுக அடையாள அட்டைகள் தற்பொழுது வழங்கப்படுவதில்லை. இதனால் முதியவர்கள் தமது தேவைகளை இலகுவாக நிறைவேற்றிக் கொள்ளமுடியா துள்ளதாகச் சுட்டிக்காட்டப்படுகிறது.

முதியவர்களுக்கென பிரதேச செயலகங்கள் ஊடாக அடையாள அட்டைகள் வழங்கப்படுவது வழமை. எனினும் குடாநாட்டு முதியவர்கள் பலருக்கு இவை இதுவரை வழங்கப்படவில்லை.

அரச அலுவலகங்கள், தனியார் நிறுவனங்களில் தமது தேவைகளை இலகுவில் நிறைவேற்றிக் கொள்வதற்கு சிரமப்படுகின் றனர்.

இவற்றைக் கருத்திற் கொண்டு அரச செயலக முதியோர் பிரிவுகளோ பிரதேச செயலகப் பிரிவுகளோ அடையாள அட்டை களை வழங்கி முதியோரின் நலனைக் காக்குமாறு பாதிப்புற்ற முதியோர்கள் வேண்டுகின்றனர்.

(70)




## மாதகல் பிரதேசத்திற்கு பவுஸர்மூலம் குடிதண்ணீர்

வலி.தென்மேற்கு, ஜூலை 5

வலிதென்மேற்கு பிரதேச சபையின் பண்டத்தரிப்பு கிராம உபஅலுவலகம் மாதகல் பிரதேசத்தில் பவுஸர் மூலம் குடிதண்ணீர் விநியோகம் செய்து வருகின்றது.

மாதகலில் குடிதண்ணீர் தட்டுப்பாடு நிலவி வரும் ஏழு இடங்களுக்கு பவுஸர் மூலம் குடிதண்ணீர் விநியோகிக்கப்படுகின்றது.

இப்பிரதேசத்தில் கிணறுகள் பலவற்றின் நீர் உவர்நீராக மாறி வருகின்றது என்றும் -

இதனால் குடிதண்ணீருக்குத் தட்டுப்பாடு நிலவி வருகின்றது என்றும் சுட்டிக் காட்டப்படுகின்றது. (202-135)

# நீர்வேலியில் மாடுகள் திருடும் சம்பவங்கள் அதிகரித்துள்ளன

நீர்வேலி,ஜூலை 5

கோப்பாய், நீர்வேலி பிரதேசங்களில் உள்ள தோட்டங்களில் மேய்ச்சலுக்காக கட்டி விடப்படும் மாடுகளை களவாடி செல்லும் திருடர்களின் கைவரிசை அண்மைக்காலமாக அதிகரித்துள்ளது.

இவ்வாறு களவாடப்படும் மாடுகளை திருடர்கள் வெட்டிக் கொன்று இறைச்சிக்காக எடுத்து செல்வதாக பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

மேய்ச்சலுக்காக தோட்டத்தில் கட்டி விடப்பட்ட பசுமாடு ஒன்றை திருடர்கள் வெட்டி இறைச்சிக்காக கொண்டு சென்ற சம்பவம் அண்மையில் நீர்வேலிப் பகுதி தோட்டம் ஒன்றில் இடம்பெற்றுள்ளது.

இந்தத் திருட்டுச் சம்பவம் இரவுவேளைகளிலே இடம்பெற்று வந்துள்ளன. திருடர்களின் இந்த தொல்லையை அடுத்து தோட்டங்களில் இரவு வேளைகளில் மாடுகளை கட்டி விடுவதை மக்கள் தவிர்த்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டது. (202-224-72)



வல்வை சிதம்பரக்கல்லூரி அதிபர் அ.விஜயநாதனின் சேவை நலன் பாராட்டுவிழா கடந்த 2ஆம் திகதி திங்கட்கிழமை கல்லூரியில் நடைபெற்றது. நிகழ்வில் விழா நாயகன் விருந்தினர்கள் சகிதம் அழைத்து வரப்படு வதை முதலாவது படத்திலும் வலயக்கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா, வல்வை முத்துமாரி அம்மன் ஆலய பிரதமகுரு எஸ்.தண்டாயுதபாணிகதேசிகர் ஆகியோர் மங்கள விளக்கேற்றுவதையும் பருத்தித்துறை பிரதேச செயலர் இரா.வரதீஸ்வரன் பாராட்டுரை [illegible] காணலாம். வல்வை மாவட்ட வைத்திய அதிகாரி க.மயிலேறும் பெருமாளும் படங்களில் காணப்படுகின்றார். (படங்கள்: சுந்தரா)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

அன்னை மடியில் 11 * 01 * 1940



ஆண்டவன் பிடியில் 05 * 06 * 2007

### கிருஸ்ணபிள்ளை துரைராசா

(ஒய்வு பெற்ற இ.போ.ச.சாரதி)

பண்பின் உறைவிடமாய்
பாசத்தின் இருப்பிடமாய்
வாழ்ந்து எம்மை விட்டுப்பிரிந்து
முப்பத்தொரு நாள்கள் ஆகிய
எமது குல தெய்வத்தின்
ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

பிள்ளையார் கோயிலடி,
கோப்பாய் மத்தி,
கோப்பாய். (62447)

காலமெல்லாம் உங்கள்
நினைவுகளுடன்:
குடும்பத்தினர்.

## சைவப்புலவர் தேர்வு இவ்வருடம் லண்டனிலும்

அகில இலங்கை சைவப்புலவர் சங்கம் வருடம் தோறும் நடத்தி வரும் சைவப்புலவர் தேர்வு இம்முறை லண்டன் மாநகரிலும நடத்தப்படவுள்ளது.

2007ஆம் ஆண்டுக்கான சைவப்புலவர், இளம் சைவப் புலவர் பரீட்சையை அடுத்தமாத இறுதி வாரத்தில் யாழ்ப்பாணம், கொழும்பு மற்றும் லண்டன் ஆகிய இடங்களில் நடத்துவதற்கு நடவடிக்கை மேற்கொண்டு வருவதாக சங்க செயலாளர் கலாபூஷணம் சைவப் புலவர் சு.செல்லத்துரை தெரிவித்தார்.

லண்டனில் புலம் பெயர்ந்து வாழும் சைவ இளைஞர்கள் பலரும் இப்பரீட்சையை லண்டன் மாநகரிலும் நடத்த வேண்டும் என்று கடந்த பல வருடங்களாக வேண்டுகோள் விடுத்து வருகின்றனர். இதனை கருத்திற் கொண்டு இவ் வருடம் இப்பரீட்சையை லண்டனிலும் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டு வருகின்றது.

பரீட்சைக்கான பாடப் புத்தகங்கள், பாடவிதானங்கள் யாவும் அங்கு ஏற்கனவே அனுப்பி வைக்கப்பட்டுள்ளனண. 20பேர் வரை இப்பரீட்சைக்கு அங்கு தோற்றவுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை- இம்முறை மட்டக்களப்பு, திருகோணமலை, வவுனியா ஆகிய பிரதேசங்களில் நிலவும் அசாதாரண சூழ்நிலைகளால் இப்பரீட்சை நடத்தப்படமாட்டாது. இப்பிரதேசத்திலுள்ள பரீட்சார்த்திகள் கொழும்புப் பரீட்சை நிலையத்தில்வந்து பரீட்சைக்கு தோற்ற முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(202-135)


## வீடு விற்பனைக்கு

கொக்குவில் சந்திக்கு அண்மையில் 3 பரப்புக் காணியில் அமைந்துள்ள வீடு விற்பனைக்கு உண்டு. பார்வையிடும் நேரம் 3 மணிக்குப் பின்.

தொடர்பு:- 67, கே.கே.எஸ்.வீதி, கொக்குவில்.

(62437)


## இறைச்சிக் கோழி விற்பனைக்கு

உயிர் புறொயிலர் இறைச்சிக் கோழி மொத்தமாகவும் சில்லறையாகவும் பின்வரும் இடங்களில் கிடைக்கும்.

1. கோழிப்பண்ணை அராலி
2. வீனஸ் பாம் திருநெல்வேலிச் சந்தி
3. வீனஸ் விற்பனை நிலையம் தட்டாதெருச் சந்தி
4. சிறீ விநாயகர் ஸ்ரோஸ் ஆனைக்கோட்டைச் சந்தி

(62440)


## 31 ஆம் நாள் நினைவு தினமும் நன்றி செலுத்தும் ஞாபகார்த்த வழிபாடும்



### அமரர் முருகுப்பிள்ளை விக்ரர் அரியரத்தினம்

அன்னை மடியில் 12.06.1927

ஆண்டவன் மகிமைக்குள் 05.06.2007

அன்பின் உறைவிடமே!
பாசத்தின் பிறப்பிடமே!
குடும்பத்தின் குலவிளக்கே!
நீங்கள் இட்டவழி தொட்ட நாம்
உங்கள் பணி அரவணைக்கக் கடவோம்.

அன்னாரின் வாழ்க்கைக்காகவும், பணிக்காகவும் நன்றி செலுத்தும் 31 ஆவது நாள் ஞாபகார்த்த வழிபாடு இன்று (05.07.2007) வியாழக்கிழமை முற்பகல் 11 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறும்.

அந் நிகழ்வில் தாங்கள் கலந்து கொள்வதுடன் பின்னர் நடைபெறவுள்ள மதிய போசனத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தம்பசிட்டி றோட், பருத்தித்துறை. (சி.52828) குடும்பத்தினர்.


BOC இலங்கை வங்கி

## மீட்கப்படாத அடகு நகைகளின் பகிரங்க ஏல விற்பனை

யாழ். மாவட்டத்தில் உள்ள பின்வரும் இலங்கை வங்கிக் கிளைகளில் 30.04.2006 இற்கு முன்னர் அடகு வைத்து மீட்கப்படாத நகைகள் யாவும் பகிரங்க ஏலத்தில் விற்கப்படவுள்ளன.

| கிளையின் பெயர் | ஏல விற்பனைத் திகதி இடம் நேரம் |
|---|---|
| யாழ்.மேற்தரக்கிளை<br>யாழ்.2 மேற்தரக்கிளை<br>திருநெல்வேலி<br>ஊர்காவற்றுறை<br>காரைநகர்<br>மானிப்பாய்<br>சுன்னாகம்<br>(அச்சுவேலி விரிவாக்கற் கிளை உட்பட)<br>காங்கேசன்துறை<br>நெல்லியடி<br>பருத்தித்துறை<br>சாவகச்சேரி | யாழ்.மேற்தரக்கிளை, யாழ்ப்பாணம்<br>2007 யூலை மாதம்<br>7ஆம், 8ஆம் திகதிகளில்<br>காலை 9.30 மணிக்கு |

இந்த ஏல விற்பனையைப் பிற்போடும் அல்லது இரத்துச் செய்யும் அதிகாரம் வங்கிக்கு உண்டு.

உதவிப் பொதுமுகாமையாளர்,
இலங்கை வங்கி (வடபிராந்தியம்), உதவிப்பொது
முகாமையாளர் காரியாலயம்,ஆஸ்பத்திரி வீதி,யாழ்ப்பாணம்.
021 222 3126, 021 222 2735

08.07.2007

(சி/52826)



## ஆறாம் மாத நினைவஞ்சலி

### செல்வன் நவரெட்ணம் மனோராஜ்

(ராஜ்)

எம்மோடு 13.02.1979

இறைவனோடு 05.01.2007



புன்னகையோடு உன்னோடு வாழ்ந்தோம்
கண்ணீரோடு உன் நினைவுகளைச் சுமக்கின்றோம்
நம்பிக்கையோடு எதிர்பார்க்கின்றோம்
மீண்டும் நீ வருவாய் என்று- மீண்டும்
நீ பிறந்து எம்மோடு வாழ்வாய் என்று.

சங்கரப்பிள்ளை வீதி,
ஆனைக்கோட்டை. (62452)

உன் பிரிவால் வாடும்:
குடும்பத்தினர்,
நேசத்திற்கு உரியவர்கள்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 28 * 07 * 1941



மறைவு 16 * 06 * 2006

### அமரர் இருணாசலம் வேலாயுதம்

(ஒய்வுபெற்ற குடிவரவு, குடியகல்வுத் திணைக்களத்தின் அதிகாரி, வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் பணிப்பாளர்)

ஆண்டுகள் ஒன்றென்ன
அறுபது ஆண்டுகள் சென்றாலும்
ஆறாது எம்துயர்.

துவாளி வீதி,
இமையாணன், உடுப்பிட்டி.

சகோதரர்கள், பிள்ளைகள்,
பேரப்பிள்ளைகள், மருமக்கள்.

(சி/52827)




## கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் உயர் கல்வி

Belarus (பெலாரூஸ்), Poland (போலாந்து), Ukraine (உக்ரைன்), Russia (ரஷ்யா) பிரபல பல்கலைக்கழகங்களில் மருத்துவம் (M.B.B.S., MD), பொறியியல், கலை, வர்த்தகம், சட்டம், கணனியியல் கற்கை நெறிகள்

15 July வரை அனுமதிகள் யாழ் நகரில் வழங்கப்படுகின்றன.

இல. 02, திருவள்ளுவர் ... வீதி ... யாழ்ப்பாணம். தொ.பே. 0777250555, ( 021 222 8247 - இரவு 7 மணிக்குப் பின்) A/L இம்முறை எடுக்கும் மாணவர்களும் விண்ணப்பிக்கலாம். பரீட்சை முடிந்தவுடன் பயணம்.

(சி.52820)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யுத்தம் மூலம் தீர்வை எட்டும் எண்ணம் இரத்தம் தோய்ந்த வரலாற்றையே தரும்

## புதிய ஜனநாயகக் கட்சி அறிக்கை

கொழும்பு,ஜூலை05

தேசிய இனப்பிரச்சினைக்கு யுத்தத்தின் மூலம் தீர்வு காணலாம் என்ற நம்பிக்கையும் முனைப்பும் ஆளும் வர்க்கத் தரப்பில் நீடிக்கும் வரை இந்நாட்டிற்கு விமோசனமோ சுபீட்சமோ கிடைக்கப் போவதில்லை. நியாயமான அரசியல் தீர்வுக்குரிய யோசனைகள் முன்வைக்கப்பட்டு பேச்சு மூலமான இணக்கப்பாடும் நேர்மையான நடைமுறைப்படுத்தலும் ஏற்படுத்தப்படாதவரை இலங்கை இரத்தப் பெருக்கினதும் மனித உயிர் அழிவுகளினதும் பொருளாதார நலிவினதும் இருப்பிடமாகவே காணப்படும். இதனைக் கடந்த மூன்று தசாப்தகால இரத்தம் தோய்ந்த வரலாற்று அனுபவங்கள் எடுத்துக்காட்டி நிற்கின்றன.

''எனவே, தேசிய இனப்பிரச்சினையைப் பயங்கரவாதம் என வியாக்கியானம் செய்து யுத்தத்தை தீவிரப்படுத்துவதன் மூலமாக நாட்டு மக்கள் எதிர்நோக்கும் பாரிய பிரச்சினைகளைத் திசை திருப்பி வரும் போக்கினை அரசு கைவிடவேண்டும். அதேவேளை, அர்த்தமுள்ள அரசியல் தீர்வை எட்டுவதற்குரிய நடவடிக்கைகளை பேச்சளவில் அன்றி செயல்முறைகளின் மூலம் முன்னெடுக்கப்படுவதையே எமது கட்சி வற்புறுத்துகின்றது.''

-இவ்வாறு புதிய ஜனநாயக கட்சி தோற்றுவிக்கப்பட்டு 29ஆவது ஆண்டை நினைவு கூர்ந்து கட்சியின் மத்திய குழு சார்பாக பொதுச் செயலாளர் சி.கா.செந்திவேல், தேசிய அமைப்பாளர் சட்டத்தரணி இ.தம்பையா இருவரும் இணைந்து வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், அவ் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது: -

'மஹிந்த சிந்தனை' மூலமாக ஜனாதிபதிப் பதவிக்கு மஹிந்த ராஜபக்ஷ வந்தபோது மாற்றங்கள் நிகழும், நாட்டிற்கும் மக்களுக்கும் பொருளாதார சுபீட்சமும் கௌரவமான சமாதானமும் அமைதியான வாழ்வும் கிடைக்கும் என்றும் நம்பிய மக்களின் தலைகளில் மண் விழுந்து வருவதையே காண முடிகிறது. கடந்த ஒன்றரை வருட ஆட்சியில் வடக்கு - கிழக்கில் உச்ச நிலைக் கொலைகளும் உயிர், உடமை அழிவுகளும் இடப்பெயர்வுகளுமே இடம் பெற்று வந்துள்ளன.

அரசு தனியார்துறை ஊழியர்களின் சம்பளங்களை அதிகரிக்கவில்லை. ஆனால், அமைச்சர்களின் எண்ணிக்கை நூற்றிப் பத்தாகவும் ஆலோசகர்களின் எண் ணிக்கை முப்பத்தைந்தாகவும் அதிகரிக்கப்பட்டு மக்களின் பணம் அவர்களுக்கு கொழுத்த சம்பளமாக்கப்பட்டுள்ளது. அத்துடன் ஊழல் மோசடிகளும் மனித உரிமை மீறல்களும் ஜனநாயக விரோத செயற்பாடுகளும் தாராளமாகத் தலைவிரித்தாடுகின்றன.

தொழிலாளர்கள் - விவசாயிகள் மற்றும் அனைத்து உழைக்கும் மக்களினதும் வாழ்க்கை நிலை மிக வேகமாகக் கீழ் இறங்கிச் செல்கிறது.

### அந்நிய சக்திகளுக்கு யுத்தம் வாய்ப்பை வழங்கியுள்ளது

மேலும் நாட்டின் யுத்தம் அந்நிய சக்திகளுக்கு நல்ல வாய்ப்பு வசதிகளை வழங்கியுள்ளது. ஒரு புறம் அமெரிக்காவும், மேற்குலகமும், ஜப்பானும் சர்வதேச சமூகம் என்ற பெயரில் தத்தமது பொருளாதார அரசியல் இராணுவ நலன்கள், தேவைகளுக்காக யுத்தத்தின் மறைவில் நின்று செயலாற்றுகின்றன. மறுபக்கத்தில் இப்பிராந்தியத்தின் வல்லரசு என்ற நிலைப்பாட்டில் இந்தியா தனது ஆதிக்கப் பிடியை இலங்கையில் அதிகரித்துக் கொள்ள முன் நிற்கிறது.

ஆதலால் யுத்தத்தினதும் அரசியல் தீர்வின்மையினதும் பாரிய எதிர்விளைவுகள் விரைவில் முழுநாட்டிற்கும் மக்களுக்கும் படுபாதகமானவையாக மாற்றம் பெறும் அபாயத்தை உருவாக்கியுள்ளன.

## வர்த்தகர்கள் கடத்தல் தொடர்பில் மூவர்கைது

முஸ்லிம் வர்த்தகர்கள் கடத்தப்பட்டு கப்பம் பெறப்பட்ட சம்பவங்களில் தொடர்புடைய பாதாள உலகக் கும்பலைச் சேர்ந்தவர் என்று கருதப்படும் கண்டி கட்டுகெல என்ற இடத்தைச்சேர்ந்த இளைஞர் ஒருவர் இரகசியப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவருடன் தொடர்புடையவர்கள் என்று நம்பப்படும் மாவனெல்லையைச் சேர்ந்த வேறு இருவரையும் இரகசியப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

முகம்மது பாரூக் மொகம்மது ஜமீல்(23) என்ற நபர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளார் என்று இரகசியப் பொலிஸார் கண்டி பொலிஸாருக்கு அறிவித்துள்ளனர். (ப)

## குடும்ப பதிவு அட்டை

வலி.தென்மேற்கு, ஜூலை 05

பண்டத்தரிப்பு பிரதேசத்தில் வசிக்கும் மக்கள் புகைப்படத்துடன் கூடிய குடும்பப் பதிவு அட்டையைப் பெற்று வைத்திருக்க வேண்டும் என்று படையினர் அறிவுறுத்தியுள்ளனர். கிராமசேவை அலுவலர்கள் மூலம் இதுபற்றி மக்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. (202-135)

# சர்வதேச கண்காணிப்புக் குழு உறுப்பினர்கள் 11 பேரில் ஒருவரது பிரசன்னமாவது அவசியம்

### நீதியரசர் பகவதிக்கு எழுதிய கடிதத்தில் ஜனாதிபதி மஹிந்த



கொழும்பு, ஜூலை 05

பல்வேறு கொலைச் சம்பவங்கள் உட்பட குறிப்பிடப்பட்ட மனித உரிமை மீறல்கள் தொடர்பாக அரசு அமைத்துள்ள விசாரணை ஆணைக்குழுவின் செயற்பாட்டை அவதானிப்பதற்கு, அதற்காக நிறுவப்பட்ட சர்வதேசப்பிரமுகர்களின் கண்காணிப்புக் குழுவைச்சேர்ந்த - குறைந்த பட்சம் ஓர் உறுப்பினராவது - சமுகமளித்திருக்கவேண்டும்.

இவ்வாறு இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கடிதமொனறின் மூலம் மேற்படி கண்காணிப்புக் குழுத்தலைவர் முன்னாள் நீதியரசர் பி.என். பகவதியைக் கேட்டிருக்கின்றார்.

தம்மால் நிறுவப்பட்ட விசாரணை ஆணைக் குழு, தனது விசாரணைகளை மேற்கொள்ளும்போது, கண்காணிப்புக்குழுவைச் சேர்ந்த - வெளிநாட்டுப்பிரமுகர்களான 11 உறுப்பினர்களில் ஒருவராவது இங்கு சமுகமளித்திருக்கவேண்டும் என்பதை உறுதிப்படுத்திக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்- என்றும் அவர் அதில் குறிப்பிட்டுள்ளார்.



ஜனாதிபதியின் சார்பாக அக்கடிதம் அவரது செயலாளர் லலித் வீரதுங்கவால், நீதியரசர் பகவதியிடம் கையளிக்கப்பட்டுள்ளதாக, ஜனாதிபதி செயலகம் தெரிவித்துள்ளது.

''இக்கடிதம் சர்வதேச சுதந்திரக் கண்காணிப்புக்குழுமீது அரசு வைத்துள்ள நம்பிக்கையைப் பிரதிபலிக்கிறது. அத்துடன், இதன் உறுப்பினர்கள் காத்திரமான பங்கை வகிக்க வேண்டுமென்ற அரசின் ஆவலையும் அது எடுத்துக் காட்டுகின்றது'' - என்று மேற்படி செயலக சிரேஷ்ட அதிகாரியொருவர் 'த ஹிண்டு' பத்திரிகைக்குத் தெரிவித்துள்ளார்.

மேற்படி கண்காணிப்புக்குழுவின் சமீபத்திய அறிக்கைக்கு, சட்டமா அதிபர் சி.ஆர்.டி.சில்வா அதிருப்தியும் ஆட்சேபனையும் தெரிவித்து, அறிக்கையொன்றை வெளியிட்டிருந்தார்.

இது குறித்து ஜனாதிபதியின் கடிதத்தில் எதுவும் குறிப்பிடப்படவேயில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சிறுவர்களைப் போராளிகளாக இணைப்பது தொடர்கின்றது

### யுனிசெவ் தலைவர் கூறுகிறார்

கொழும்பு, ஜூலை 5

தமிழீழவிடுதலைப்புலிகள் அமைப்பும் அதிலிருந்து பிரிந்துசென்று அரசாங்கத்துடன் இணைந்து செயற்படும் கருணாகுழுவும் தங்கள் வாக்குறுதிகளை மீறித் தொடர்ந்தும் சிறுவர்களைப் போராளிகளாக இணைத்துவருவதாக 'யுனிசெவ்' திங்கட்கிழமை குற்றஞ் சாட்டியது.

இந்தவருட இறுதியுடன் தங்கள் அமைப்பில் வயது குறைந்த போராளிகள் இருக்க மாட்டார்கள் என்று விடுதலைப்புலிகள் வாக்களித்திருந்தார்கள் ஆனால் ஜனவரிக்குப் பிறகு 130 சிறுவர்கள்வரை தம்முடன் இணைத்துக்கொண்டுள்ளார்கள். அதேசமயம், கருணாகுழு சுமார் 70 சிறுவர்களை சேர்த்துக்கொண்டுள்ளது - என்று மேற்படி சிறுவர்களுக்கான ஐ.நா.முகவர் அமைப்புத் தெரிவித்துள்ளது.

தமிழீழ விடுதலைப்புலிகள் நிறுத்துவதாக வாக்களித்திருத்தபோதிலும் தொடர்ந்தும் 18 வயதுக்கு கீழ்ப்பட்டவர்களைத் தங்களுடன் இணைத்துவருகிறார்கள் என்று இலங்கையிலுள்ள யுனிசெவ் அமைப்பின் தலைவர் கோ.அன்னாவான் கேர்பன் கூறினார். (ப)

## கலந்துரையாடல்

வலி.தென்மேற்கு, ஜூலை 5

பண்டத்தரிப்பு தபால் அலுவலக ஆலோசனைக்குழுவின் கலந்துரையாடல் எதிர்வரும் சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு தபால் அதிபர் தலைமையில் நடைபெறவுள்ளது. (135)

## சீரற்ற பஸ்சேவை

வலி.தென்மேற்கு, ஜூலை 05

யாழ்ப்பாணம் - இளவாலை (பாதை இல 788) பஸ்சேவை கடந்த இருவாரமாக சீரற்ற நிலையில் இருந்து வருவதாக பயணிகள் முறையிடுகின்றனர்.

காலையில் நடைபெறும் மாணவருக்கான பாடசாலை பஸ்சேவை கடந்த சில தினங்களாக நடைபெறவில்லை. இதனால் மாணவர், ஆசிரியர்கள் சிரமங்களை எதிர் நோக்கி வருகின்றனர்.

தனியார் மினிபஸ்களில் பலத்த இட நெருக்கடிக்கு மத்தியில் இவர்கள் பிரயாணம் மேற்கொண்டு வருவதை அவதானிக்க முடிகின்றது.

(202-135)

### முன்னாள் கடற்படைத் தளபதி சந்தகிரி குறித்த

# ஜனாதிபதி ஆணைக்குழு விசாரணை அறிக்கையை வெளியிடக் கோரிக்கை

கொழும்பு, ஜூலை5

முன்னாள் கடற்படைத் தளபதி தயாவிக்கிரம குமார் சந்தகிரி மீது விசேட ஜனாதிபதி ஆணைக்குழு நடத்திய விசாரணையின் இறுதி பிரதியொன்றைப் பெறுவதற்கான விண்ணப்பம் ஒன்று உயர் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பாக அழைப்பாணை முன்னாள் கடற்படைத் தளபதிக்கு அனுப்பப்பட்டுள்ளது.

மனுதாரர் சார்ள்ஸ்பீட்டர் ஹிக்கின்ஸ் என்பவர், ஜனாதிபதி ஆணைக்குழுவின் விசாரணையில் கண்டறியப்பட்டவைகள் யாவற்றையும் சட்டத்தின் பிரகாரம் வர்த்தமானியில் பிரசுரிக்கும்படி கட்டளையிடுமாறு உயர் நீதிமன்றத்தைக் கேட்டுள்ளார்.

தயா சந்தகிரிக்கு அமைச்சரவையால் வழங்கப்பட்ட பதவி செல்லுபடியாகாதென உத்தரவிடும்படி கோரி தாக்கல் செய்யப்பட்ட மனுவை விசாரணைக்கு எடுத்துக் கொள்ள அனுமதிக்கப்பட்டதையடுத்து இந்தப் புதிய மனுதாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்த மனுவின் விசாரணை முடிவடையும் வரை பாதுகாப்பு அமைச்சின் பிரதிசெயலாளராக சந்தகிரி பணிபுரிவதைத்தடை செய்யுமாறும் மனுவில் கோரப்பட்டுள்ளது.

முதல் பிரதிவாதியான சந்தகிரி ஊழல் குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக விசேடவிசாரணைக் குட்படுத்தப்பட்டிருந்தார். அப்படியானவர் ஒருவருக்கு அரச பதவியொன்றை வழங்குவதானது ஏனைய ஊழல் அதிகாரிகளுக்கும் ஊக்கம் அளிக்கும் செயற்பாடாக அமைந்து விடும் என்று மனுதாரர் தெரிவித்துள்ளார். (ப)

# புதிய பிரதமர் பதவியேற்ற பின்னர் பிரிட்டனில் வன்செயல்கள் ஆரம்பம்

லண்டன், ஜூலை 5

பிரிட்டனில் புதிய பிரதமராக கோடன் பிறவுண் பதவியேற்றபின் வன்செயல் சம்பவங்கள் அங்கு அதிகரித்துள்ளன. அதனை அடுத்து பாதுகாப்பு ஏற்பாடுகள் உச்ச நிலைக்குக் கொண்டுவரப்பட்டுள்ளன.

கிளாஸ்கோ, லண்டன் வடக்கு ஆகிய பகுதிகளில் குண்டுகள் மீட்கப்பட்டன, வாகனக்குண்டு ஒன்று வெடித்தது. இந்த வன்செயல் சம்பவங்களைத் தொடர்ந்து பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டது.

ரயில் நிலையங்கள், திணைக்களங்கள், வர்த்தக மையங்கள் ஆகிய இடங்களில் மேலதிக படையினர் குவிக்கப்பட்டுள்ளனர்.

வீதிச்சோதனைகள் தீவிரமாக்கப்பட்டுள்ளன. வீதியில் செல்பவர்களின் அடையாள அட்டைகள் தீவிரபரிசோதனைக்கு உட்படுத்தப்படுகின்றன.

வாகனங்கள் நவீன சாதனங்கள் கொண்டு துருவித்துருவி சோதனைகளுக்கு உட்படுத்தப்படுகின்றன.

விமான நிலையத்துக்கு செல்லும் சகல வாகனங்களும் சோதனையின் பின்பே அனுமதிக்கப்படுகின்றன.

சந்தேகத்துக்குரிய வகையில் நடமாடுபவர்கள் கைது செய்யப்பட்டும் வருகின்றனர். அவர்களில் பலர் விசாரணையின் பின் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

பயங்கரவாதத்தை தூண்டும் விதத்தில் வன்செயல்கள் நடத்தப்பட்டிருப்பதாக அவதானிகள் தெரிவித்தனர்.

(அ-1)

## நமது பயணம் எப்படி இருக்க வேண்டும்?

சமுத்திரத்திலிருந்து பிறந்து உருவான நதியின் நீர் வடிவத்திலும் சுவையிலும் வேறுபட்டிருப்பினும் கடைசியில் சமுத்திரத்திலேயே சங்கமமாகிறது. இதற்கிடையில் அது எத்தனையோ வகையான சோதனைகளுக்கு உள்ளாகிறது. அதன் மூலமே தாய்மையடைகிறது. ஆவியாகி, மேகமாகி, மழையாய்ப் பொழிந்து, நதியாக உருமாறி ஓடிக் கடைசியாகக் கடலில் சங்கமிக்கிறது. இவ்வாறு ஆவியாக இருக்கும் நிலை சத்யம் என்று கொண்டால் மேகம், தர்மம் என அழைக்கப்படலாம். மழையாய்ப் பொழியும் நீர்த்துளிகள் அன்பு என்னும் பிரேமைக்கு ஒப்பிடலாம். புரண்டு ஓடும் நதி பேரானந்தம். அது இறுதியில் இறைவனின் கருணா சமுத்திரமான பேரானந்தத்துடன் ஐக்கியமாகின்றது. என்றாவது ஒருநாள் இலக்கை அடைந்துதான் தீரவேண்டும் எங்கிருந்து வந்ததோ அவ்விடத்தை அடைவதுதான் ஜீவராசிகளுக்கு இயல்பான தன்மை.



ஆயிரம் நதிகள் சமுத்திரத்தில் சங்கமமாகின்றன. இருப்பினும் கடல்தான் அளவில் பெரிதாவதில்லை. ஏனெனில் அத்தனை நதிகளும் கடலிலிருந்து மேகமாக, மழையாக பின் நீரோடும் நதி என உருவானவையே. அதுபோல் நம்மைச் சுற்றி நாம் காண்பவை அனைத்தும் நம்மிடமிருந்து வெளிப்பட்டவை.

உலகியல் பொருள்கள், வடிவங்கள், தனிப்பட்ட மனிதர்கள் அனைத்தும் இறைவனிடமே நிறைந்திருக்கின்றன. அதனால் இறைவன் நுண்ணுயிர்களிலும் பெரிய வடிவங்களிலும் என எல்லா இடத்திலும் நிறைந்துள்ளான் எனப் புரிந்து கொள்ளுங்கள். அணுவிலும் உள்ளான் பரந்து விரிந்து பிரபஞ்சம் முழுவதும் நிறைந்திருக்கின்றான். எல்லாவற்றுக்கும் நிரந்தர சாட்சியாக விளங்குகிறான். ஆகவே ஒவ்வொரு அணுவும் கடவுளே அணுஸ்வருபமாகவே விளங்குகிறார் என்பதைப் புரிந்துகொள்ளுங்கள். (நன்றி : உண்மையின் உண்மை)

சாயி சிந்தனை

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 20 ★ 06 ★ 1933



இறப்பு 16 ★ 06 ★ 2006

### திருமதி சபாபதிப்பிள்ளை மகேஸ்வரி

அம்மா எமக்குள் உயிராயிருந்தீர்கள்
ஊருக்கும் உறவுகளுக்கும்
ஒளியாயிருந்து வழிகாட்டினீர்கள்
ஓராண்டு ஓடி மறைந்தாலும் உங்கள்
நினைவலைகள் எங்கள் மனதைவிட்டு நீங்காதம்மா.

'சபாபதி பவனம்',
பண்ணாகம்,
சுழிபுரம். (62279)

பிரிவால் துயருறும்:
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

## தவறிவிட்டது

யாழ்ப்பாணம் ... இடையில் நிரோஜா ... என்பவருடைய தேசிய அடையாள அட்டை, ... அடையாள அட்டை மற்றும் பாடசாலை அடையாள அட்டை ஆகியன தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் இல.64, பெரியகடை வீதி, யாழ்ப்பாணம் என்னும் விலாசத்தில் ஒப்படைக்குமாறு வேண்டுகின்றேன். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

## மணமகள் தேவை

1972ஆம் ஆண்டு, பூராடம் (4ஆம் பாதம்) நட்சத்திரத்தில் பிறந்த, கொழும்பில் வதியும் மணமகனுக்கு (Professional Dancer - Kalashethra) பரத/இசைத்துறை சார்ந்த நல்ல மணமகளைப் பெற்றோர் தேடுகின்றனர்.

தொடர்பு: G.நக்கீரன்,
(0773618524/0776203797)
கோணாவளை வைரவர் லேன், கொக்குவில். (62441)

## பெயர் மாற்றம்

• நவாலி வடக்கு, மானிப்பாய் என்னும் முகவரியைச் சேர்ந்த **திருநாவுக்கரசு டிஷாந்த்** தனது பெயரை **திருநாவுக்கரசு மோபிதன்** என இன்று (05-07-2007) வியாழக்கிழமை தொடக்கம் மாற்றியுள்ளார் என்பதை இத்தால் சகலருக்கும் அறியத்தருகின்றேன்.

நவாலி வடக்கு,
மானிப்பாய்.
(62417)

திருநாவுக்கரசு விக்னேஸ்வரி
(தாய்).

உ
ஓம் குருநாதா துணை
ஓம் நாகப்ப சுவாமி துணை

## தென்மராட்சி - வரணி - மாசேரி
## திருவருள்மிகு புராதன குருநாதர் கோயில்
## மகாபொங்கல் திருவிழா விஞ்ஞாபனம் - 2007

*குருநாதர் அடியார்களே!*

*சர்வசித்து வருஷ மகா பொங்கல் திருவிழா எமது முன்னோரின் பாரம்பரிய மரபுகளின்படி நடைபெறுவதற்கு எம்பெருமான் திருவருள் நல்கியுள்ளார்.*

★ *05.07.2007வியாழக்கிழமை 7 மணிக்கு பண்ட மரவடியிலிருந்து பண்டம் எடுக்கப் புறப்படுதல், மு.ப.10 மணிக்கு கொடிகாமம் சந்தையிலிருந்து பண்டம் எடுத்தல், பி.ப. 5 மணிக்கு பண்ட மரவடியை அடைதலும் அன்னதானமும்.*
★ *06.07.2007 வெள்ளிக்கிழமை பி.ப. 5 மணிக்கு பண்ட மரவடியிலிருந்து கோயிலிற்கு பண்டம் எடுத்தல்.*
★ *07.07.2007 சனிக்கிழமை அதிகாலை வளர்ந்து நேருதல், தொடர்ந்து பொங்கல், படையல், கத்திமடை, விசேட பூசைகள், பரிகலம் வழிவிடல், மகேஸ்வர பூசை என்பன மரபு முறைப்படி இடம்பெறத் திருவருள் கைகூடியுள்ளது.*

**அனைவரும் வருக! குருநாதர் திருவருள் பெறுக!**

சிவத்திரு நா.முருகேசு
பாரம்பரை சிவகலைப் பூசகர்.
(62443)

சைவப்புலவர், திருவருள் வாசகர்
சிவத்திரு க.சி.கா.கமலநாதன் M.A.
பரம்பரைத் தர்மகர்த்தா, பிரதம பூசகர்.

## 2ஆம் ஆண்டு நினைவு நாள்



திருமதி
### ஜெயந்திமாலா சிவரத்தினராசா
*(தென்மராட்சி மேற்கு ப.நோ.கூ.சங்க தட்டெழுத்தாளர்)*

மண்ணில் 16★07★1959 — விண்ணில் 26★06★2005

ஆயிரம் வசதிகள் இங்கு இருந்தும்
அம்மா நீயின்றி அகதியாக வாழ்கின்றோம்
காலங்கள் பல சென்றாலும்- தாயே
உனை என்றும் மறவோம்.

கைதடி மேற்கு,
கைதடி. (62434)

*என்றும் உங்கள் நினைவுகளுடன்:*
**கணவர், பிள்ளைகள்.**

## அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்



### அமரர் கந்தவனம் கமலாகரன்

அன்னை மடியில் 04★10★1940 — ஆண்டவன் அடியில் 05★06★2007

வதிரி, கமலவாசத்தைப் பிறப்பிடமாகவும் வதிரி, சிவானந்த பவனத்தைப் புகுந்த விடாகவும் கொண்ட காலஞ்சென்ற கந்தவனம் கமலாகரன் அவர்களின் மரணச் சடங்கில் கலந்துகொண்டவர்களுக்கும் உள்நாட்டிலும் வெளிநாட்டிலுமிருந்து தொலைபேசி, தந்தி ஊடாக அனுதாபங்களைத் தெரிவித்தவர்களுக்கும் அஞ்சலிப் பிரசுரங்களை அச்சிட்டு வெளியிட்ட அன்புள்ளங்கள் அனைவருக்கும், பலவகைகளில் எமக்கு உதவியோருக்கும் எங்கள் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம். அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (05.07.2007) வியாழக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெறவுள்ளதால் அத்தருணம் தாங்களும் வருகை தந்து கிரியைகளிலும் கலந்துகொண்டு அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இதனையே தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

*'சிவானந்த பவனம்', வதிரி.* 0779512412 — **குடும்பத்தினர்.** (62387)


Save the Children in Sri Lanka

## VACANCY

Save the Children in Sri Lanka [SCiSL] is an International Non Governmental Organization, which is part of the International Save the Children Alliance, the world's largest independent movement for children working in *120* countries. For the past 30 years, SCiSL has been an advocate for children's rights and has worked hard to make real and lasting improvements in the lives of all Sri Lankan children irrespective of nationality, race or religion.

**We are looking for a committed, creative and energetic individual to join *our* team as a:**

**PROJECTS OFFICER - CHILD PROTECTION (SOCIAL AND LEGAL PROTECTION)**

The Projects' Officer is responsible for the day to day management of his/her assigned Partners who are engaged in Child Protection [Social and Legal Protection] projects. The post holder is also expected to take initiatives to improve the quality of co-operation with, and work for Partners functioning in the Child Protection sector.
**Please note that only Sri Lankan citizens are eligible to apply for this position.**

**Base Station: Jaffna**
**Remuneration: Gross Salary - Rs. 38,118/=**

**Essential Qualifications & Experience**
1. Graduate Degree in Social Sciences or equivalent qualification from a related discipline.
2. Three [3] years experience in development organisations, INGOs or LNGOs, out of which at least two [2] years proven experience in the area of child protection.
3. Analytical skills and proven experience in programme management, financial management including management of budgets, report writing and computer literacy in Microsoft Office and Lotus Notes.
4. Good interpersonal and liaison skills with an excellent command of written and spoken English with fluency in Sinhala/Tamil.
5. Workshop, group and meeting facilitation skills.
6. Ability to work independently using own initiative within the scope of responsibilities.
7. Ability and willingness to travel to all parts of the country.

**Please note:**
* Closing date for applications will be 13th July 2007.
* Age limit at SCiSL is 60 years.
* The above position would be initially up to 31st March 2008.
* Save the Children in Sri Lanka is an equal opportunity employer and does not discriminate with respect to gender, religion, ethnicity or caste.
* The position applied for should be indicated on the top of your application and on the top left hand corner of the envelope. **Please ensure that the names of two non-related referees are provided to:**

**E mail :** amirdhabashini@savethechildren.lk
**Postal:** **Save the Children in Sri Lanka**
**HR/ Administrative Assistant,**
**No. 146, Temple Road, Nallur,**
**Jaffna.**

Only applicants selected for the interview will be contacted. No telephone inquiries please

Save the Children in Sri Lanka [SCiSL] is part of the world's largest independent movement for children working in 120 countries. SCiSL is a non religious, non political, independent international organization working for the protection and the full realization of child rights. The four pillars of the Save the Children in Sri Lanka programme are: (a) **Child Protection**, (b) **Education, including Early Childhood Education/Early Childhood Care and Development (ECE)/ECCD**, (c) **Household Economic Security** and (d) **Child Rights.** Our projects, both self implemented and in partnership with local organizations are carried out in over 18 locations throughout the country.

**Protecting Rights - Promoting Responsibilities** (C/62810)


## ஓராண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில் 11 - 06 - 1952



ஆண்டவன் பாதத்தில் 15 - 06 - 2006

### அமரர் செல்லத்துரை சிவபாதம்

பாக்கியம் பெற்ற பாக்கியமே!
பாசம்மிக்க உன் குரல்கேட்டு பன்னிரண்டு
மாதங்கள் உருண்டோடி விட்டதையா!
எங்களை வாழ வைத்த பாசச் செம்மலே!
தாய்ப்பாரம் தீர்த்த தயாநிதியே!
கடைசி மூச்சுவரை அக்கா என்ற சொல்லே
தாரக மந்திரமாய் உச்சரித்த எம் செல்வமே
இப்பிறப்பில் மட்டுமல்ல எத்தனை ஜென்மம்
எடுத்தாலும் நீயே எங்களுக்கு தம்பியாக, அண்ணாவாக
கிடைக்க வேண்டுகிறோம்
நீ சென்ற பாதைக்கு நாமும் வரும் வரை
எம் உள்ளத்தில் எம்பாச இதய ஜோதியை
அர்ச்சித்து ஆராதனை செய்து வரும்...

'அன்னை நிழல்',
செட்டியார்மடம், வட்டுக்கோட்டை. (62350)

**செ.தனலட்சுமி** *(அக்கா).*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# தவறுகளைத் தொடர்ந்து இழைத்து விபரீதங்களை வாங்கிக் கொள்வோர்

இலங்கைத் தீவில் ஈழத் தமிழர்களின் தேசிய இனப் பிரச்சினை தொடர்பான விவகாரத்தை இன்றுவரை கையாண்ட எல்லாத் தரப்புகளுமே தமது பொறுப்பற்ற போக்கினால் எழக்கூடிய விபரீத விளைவுகளைப் பற்றிச் சிந்திக்காமல், குறுகிய எண்ணப் போக்கில் இவ்விடயத்தை அணுகி, அதன் மூலம் அதனை மென்மேலும் சிக்கலாக்கியிருக்கின்றன என்பதே நிதர்சனம்.

இப்பிணக்கில் நேரடியாகச் சம்பந்தப்பட்ட சிங்களத் தலைமைகளில் இருந்து, அயல் வல்லாதிக்க சக்தியான இந்தியா முதற்கொண்டு, சர்வதேச சமூகம் வரை இத்தவறுக்கு விதிவிலக்கல்ல என்பதே அனுபவப் பாடம்.

இவ்வாறு தவறுகளை இழைத்தோருக்கு காலம் கடந்துதான் - அத்தவறுகள் விபரீத விளைவுகளை ஏற்படுத்தி மோசமான பட்டறிவை தந்த பின்னர்தான் - அவற்றின் தாற்பரியம் புரியத் தொடங்குகின்றது என்பதே இவ்விடயத்தில் உள்ள பொது அம்சமாகும்.

தன்னுடைய புவியியல் கேந்திர நலனை முன்னிறுத்தி, அதன் அடிப்படையில் தான் வகுத்த தீர்வுத்திட்டம் ஒன்றை, உரிமைக்காகத் தம்முயிரையும் , உதிரத்தையும், உடைமைகளையும் ஈகம் செய்து போராடும் தமிழினத்தின் மீது வலோற்காரமாகத் திணிக்க முயன்ற இந்தியா, அந்த வரலாற்றுத் தவறின் மூலம் மிக மோசமான பாடத்தைப் படிக்க நேர்ந்தது. ஒரு சிறிய கரந்தடிப்படையணியுடன் மோதிய பிராந்திய வல்லாதிக்க சக்தி, அப்போது எதிர்கொண்ட - எதிர்பாராத - மோசமான இராணுவப் பின்னடைவு காரணமாக, இவ்விவகாரத்தில் தனது பிராந்திய வல்லாதிக்கத் தகுதியைப் பெயருக்கு வைத்துக்கொண்டு இற்றைவரை இவ்விடயத்தில் தள்ளிநின்று பார்க்கும் பார்வையாளராக ஒதுங்கிக் காத்திருக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கின்றது.

இலங்கை இனப்பிரச்சினைக்கு அமைதி வழித் தீர்வு காண்பதற்காக 2002 ஆரம்பத்தில் தொடங்கப்பட்ட சமாதான முயற்சிகளில் சர்வதேசம் அதிகளவில் ஈடுபாடும், பங்களிப்பும் வெளிப்படுத்தியது.

அந்த அமைதி முயற்சிக்கான காலத்தில் - சமாதான எத்தனங்கள் முன்னெடுக்கப்படும் வேளையில் - விடுதலைப் புலிகளைத் தடைசெய்து, பயங்கரவாத அமைப்புகளின் பட்டியலில் சேர்ப்பது மோசமான பின்னடைவுகளைக் கொண்டுவரும் என சர்வதேச சமூகத்துக்குத் திரும்பத் திரும்ப எடுத்துரைக்கப்பட்டது. அமைதி முயற்சிகளில் இலங்கை அரசும், விடுதலைப் புலிகளும் சமதரப்பு என்ற அந்தஸ்தில் ஈடுபட்டிருக்கும்போது, அதில் ஒரு தரப்பான புலிகளின் அந்தஸ்தை மோசமாகப் பின்னடைவுக்குள் ஆழ்த்தும் விதத்தில் சர்வதேசம் நடந்துகொண்டால், அமைதி எத்தனங்களே பாழ்பட்டுப் போகும் என்று சர்வதேச சமூகத்துக்கு எச்சரிக்கப்பட்டது. ஆனால் அந்த எச்சரிக்கையை உதாசீனப்படுத்தி மேற்குலகம் நடந்துகொண்டது. புலிகள் இயக்கத்தைத் தடை செய்து, அமைதி முயற்சிகளில் அந்த அமைப்பின் சம அந்தஸ்தைக் குலைக்கவும், அதன் மூலம் சமாதான நடவடிக்கைகளைக் குழப்பவும் அது கால்கோள் இட்டது.

புலிகளின் அந்தஸ்தைத் தரம் இறக்கி, அதனால் அமைதி முயற்சிகளுக்கு வேட்டு வைத்த சர்வதேசம், இப்போது மற்றைய தரப்பான இலங்கை அரசு, இனப்பிரச்சினை விவகாரத்தைக் கையாள்வதில் மேற்கொள்ளும் திருகுதாளத்தைப் பார்த்து என்ன செய்வது என்று தெரியாமல் திகைத்துப்போய் நிற்கின்றது.

இந்த வகையில், தென்னிலங்கை ஆட்சி இப்பிணக்குத் தொடர்பாகத் தொடர்ந்து இழைத்து வரும் தவறுகளோ அனேகம்.

ஈழத் தமிழரின் தாயக பூமியின் மைய மண்ணான யாழ். குடாநாட்டில் இருந்து தமிழர்களின் ஆயுதம் தாங்கிய விடுதலைப் போராட்ட சக்திகளான விடுதலைப் புலிகளை வன்னிக்கு விரட்டியடித்த தென்னிலங்கைச் சிங்களம், அந்தச் 'சாதனையை' பெரும் சரித்திர பூர்வ நிகழ்வாக விழாவெடுத்துக் கொண்டாடியது. ஆனால் உண்மையில் அதன் பெறுபேறாக நடந்தேறியது என்ன?

1996 முற்பகுதியில் - அதுவரை வெறும் கரந்தடிப் படையாக - தாக்கிவிட்டு மறையும் கெரில்லா படை அணியாக - விளங்கிய விடுதலைப் புலிகள் யாழ். குடாநாட்டிலிருந்து வன்னிக்காடுகளுக்குத் துரத்தப்பட்டனர். விளைவு என்னவாயிற்று?

கரந்தடிப் படையாகக் காடுகளுக்குள் முடக்கப்பட்ட விடுதலைப் புலிகள் அங்கிருந்தபடியே விஸ்வரூபம் எடுத்து, பிரமிப்பூட்டும் போரியல் வளர்ச்சியோடு, காத்திரமான தாக்குதல் பலத்தோடு, பெரும் மரபு வழி இராணுவமாக சில ஆண்டுகளில் வெளிப்பட்டனர்.

இப்போது கிழக்கில் குடுமிமலை(தொப்பிகல) காட்டிலிருந்தும் புலிகளைத் துரத்தியடித்து விட்டோம் என மார்தட்டும் தென்னிலங்கை, புலிகளிடமிருந்து தாங்கள் புதிதாகக் கைப்பற்றியவை எனக் கூறப்படும் பெரும் பிரதேசங்களில் அகலக் கால் வைத்தபடி விளைவை எதிர்கொள்ளக் காத்திருக்கின்றன.

யாழ். குடாநாட்டிலிருந்து துரத்தப்பட்ட புலிகள் பின்னர் விஸ்வரூபமாக வெளிப்பட்டமை போல கிழக்கிலிருந்து துரத்தப்பட்ட அவர்கள் இனிமேல் எப்படி வெளிப்படுவர்?

*"இடம், காலம், சூழல் என்பவற்றுக்கு ஏற்பவே விடுதலைப் புலிகள் தங்களது இராணுவத் தந்திரோபாயங்களை வகுக்கின்றனர். கிழக்கில் தாங்கள் விரித்த பொறிக்குள் தாங்களே அகப்பட்டுக் கொண்டு விட்டனர் என்பதை சிங்கள இராணுவம் விரைவில் உணர்ந்துகொள்ளும்."* - என்று புலிகளின் அரசியல் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் கூறியிருப்பதை இந்தப் பின்னணியில் நோக்கி விளைவை உய்த்தறிவதே பொருத்தமானது.

# அரசியல் ரீதியில் விடுதலைப் புலிகளை ஒருபோதும் தோற்கடிக்கவே முடியாது

## உறுதியாகக் கூறுகிறார் அமைச்சர் டியூ குணசேகரா

கொழும்பு,ஜூலை5

தமிழீழ விடுதலைப் புலிகளை இராணுவ ரீதியில் தோற்கடித்திருந்தாலும் அரசியல் ரீதியாக அவர்களை ஒருபோதும் தோற்கடிக்கவே முடியாது.

இவ்வாறு கூறினார் அரசமைப்பு விவகார அமைச்சரும் இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளருமான டி.ஈ.டபிள்யூ. குணசேகர.

கம்யூனிஸ்ட் கட்சியின் 64 ஆவது வருட பூர்த்தி தினத்தையிட்டு நடைபெற்ற கூட்டத்தில் பேசுகையில் அமைச்சர் மேற்படி கருத்தைச் சொன்னார்.

அவர் அங்கு பேசுகையில் மேலும் கூறியதாவது-

நாட்டில் இனப்பிரச்சினையொன்று இருந்து வருகிறது. அதற்கு ஒரு தீர்வு காணப்பட வேண்டும். ஐக்கிய இலங்கைக்குள் அதிகாரங்கள் பகிரப்படவேண்டும்.

எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்க காலத்தில் இந்தப் பிரச்சினை தலையெடுத்தது. ஜே.ஆர்.ஜயவர்த்தன காலத்தில் இரத்தக்களரியுடனான ஒரு சிக்கலாக உருமாறியது. இரு தரப்பினரும் கடந்த இருபத்தைந்து வருடங்களாகப் போராடிவந்த போதிலும் பிரச்சினை தீர்ந்தபாடில்லை.

### அரசியலில் இனவெறி

இன்றைய தேசிய பிரச்சினையின் மூலகர்த்தா பிரபாகரன் என்று பலர் நினைக்கிறார்கள். அப்படியல்ல. அரசியல் தீர்வு ஒன்று காணப்படுவதற்கு முட்டுக்கட்டையாக இரண்டு அம்சங்கள் இப்போது முளை கொண்டுள்ளன. தற்போதைய இக்கட்டான நிலை ஸ்ரீ.ல.சு.க - ஜே.வி.பி. புரிந்துணர்வு உடன்படிக்கையிலிருந்து உருவானதாகக் கொள்ளலாம். நிலைமை சிக்கலடைந்துள்ளதுடன் அபாயகரமாகவும் மாறியுள்ளது. இன்றைய அரசியலில் இனவெறித் தன்மை ஆக்கிரமித்து நிற்கும் போக்கைக் காணமுடிகிறது.

நாம் பல சந்தர்ப்பங்களைத் தவறவிட்டுள்ளோம். இப்போதைய சந்தர்ப்பத்தையும் தவறவிட்டோமானால் பயங்கரவாதத்துடன் நிரந்தரமாக உடனிருந்து வாழும் நிலைக்குத் தள்ளப்படுவோம். அரசியல் தீர்வொன்று ஏற்படுவதில் ஜே.வி.பி., ஹெலஉறுமய கட்சிகளின் மத்தியில் நிதானப் போக்கு ஒன்று ஏற்படும் என்று எதிர்பார்க்கின்றோம். இவ்வாறு அவர் தொடர்ந்து பேசுகையில் குறிப்பிட்டார். (ப)

# ஆயுள்வேத வைத்தியர் தகுதிகாண் பரீட்சைக்கு 40 பேருக்கு அழைப்பு

## செயலக ஏற்பாட்டில் பயண வசதி

யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த ஆயுள்வேத மருத்துவ உத்தியோகத்தர்கள் தகுதிகாண் பரீட்சைக்கு கொழும்பு செல்வதற்கான கப்பல் பயண ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக மேலதிக அரச அதிபர் ஆ.சிவசுவாமி தெரிவித்தார்.

மேற்படி தகுதிகாண பரீட்சை எதிர்வரும் 27ஆம் திகதி இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தில் நடைபெறவுள்ளது.

ஆயுள்வேதத் திணைக்கள உதவி ஆணையாளர் இந்த அறிவித்தலை விடுத்துள்ளார்.

இதனை அடுத்து யாழ். செயலகம் அவர்களுக்கான பயண ஏற்பாடுகளைச் செய்துள்ளது.

பரீட்சார்த்திகள் பயண அனுமதிகளை தமது பிரதேச சிவில் நிர்வாக அலுவலகத்தில் பெற்று எதிர்வரும் 23 ஆம் திகதி கப்பல் மூலம் பயணம் மேற்கொள்ளமுடியும்.

பரீட்சார்த்திகள் எதிர்வரும் 20ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு பாதுகாப்பு பயண அனுமதியுடன் யாழ். செயலக புனர்வாழ்வுக் கிளைக்குச் சமுகமளித்து பயணத்தை உறுதிப்படுத்திக்கொள்ளுமாறு மேலதிக அரச அதிபர் மேலும் தெரிவித்துள்ளார்.

பரீட்சார்த்திகளின் விவரம் வருமாறு:-

எஸ்.அமில்கினி, ஏ.ஏ.அனிஸ்ரின், என்.பரீனா, எம்.சி.எம்.கலீட், வி.கிரிதரன், எஸ்.கிருத்திகா, எம்.எஸ்.எம்.லபீர், எம்.எம். மலீகா, எஸ்.ஜே.மன்சில், என்.ரீ.மூர்த்தி

என்.நளினி, பி.ஐ.நிகாரா, எம்.எஸ். நூரல் முபீனா, எஸ்.ஐ.சாகீப், ஆர்.பிரதீப்குமார், ரி.சர்வானந்தன், எஸ்.சர்வானந்தன், எஸ்.சாந்தினி, எஸ்.சிவலஷ்மி, எம்.சிவகீதா,

கே.சிவதரன், வி.சிவகுமார், ஜே.சுகுமாரன், எஸ்.சுதாமணி, ஏ.தத்துவசுதன், ரி.திலீபன், வி.திருமால், எஸ்.வர்ணகுலேந்திரன், எஸ்.கிருஜா, பி.சுரேஸ்குமார்.

எம்.கணேசலிங்கம், எஸ்.சரோஜா, எஸ்.சிவசுப்பிரமணியம், எஸ்.கணேசன், ஏ.சிவசுப்பிரமணியம், கே.செல்வநாதன், கே.நடேசராஜன், ரி.கமலாதேவி, ஆர்.பூபதீஸ்வரி, எஸ்.மெகாலத்.(203)

# நகரத்தை ஸ்ரான்லி வீதியுடன் இணைக்கும் பாதை மூடப்பட்டது

யாழ்ப்பாணம்,ஜூலை5

யாழ்.பஸ் நிலையத்துக்குப் பின்புறமாக மின்சார நிலைய வீதியிலிருந்து ஸ்ரான்லி வீதிக்கு வரும் - குறுக்கு வீதி பொதுமக்கள் போக்குவரத்துக்கு முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது.

கடந்த பல மாதங்களாக வாகனப் போக்குவரத்துக்குத் தடை செய்யப்பட்டிருந்த இந்த வீதி பொதுமக்கள் நடத்து செல்வதற்கு அனுமதிக்கப்பட்டிருந்தது.

பின்னர் அண்மையில் முற்றாகத் திறக்கப்பட்ட இந்த வீதி, வாகனப் போக்குவரத்துக்கும் அனுமதிக்கப்பட்டிருந்தது. அதனையடுத்து மக்கள் ஸ்ரான்லி வீதிக்குச் செல்வதற்கு இந்த வீதியைப் பயன்படுத்தி வந்தனர்.

எனினும் கடந்த திங்கட்கிழமை தொடக்கம் இந்த வீதி பொதுமக்கள் போக்குவரத்துக்கு முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது. இதன் காரணமாக ஸ்ரான்லி வீதிக்குச் செல்வோர் வின்ஸர் சந்தி வழியாகவே செல்லவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. (அ-50)

# கடத்தப்பட்ட பி.பி.சி. பத்திரிகையாளர் 114 நாள்களின் பின் நேற்று விடுதலை

லண்டன்,ஜூலை 5

பலஸ்தீன காஸா பகுதியில் தீவிர வாதிகளால் கடத்தப்பட்டிருந்த பி.பி.ஸி. பத்திரிகையாளர்அலன் ஜோன்ஸ்ரன் (வயது 45) 114 நாள்களின் பின்னர் நேற்றுக் காலை விடுதலை செய் யப்பட்டார்.




மூன்று மாதங்கள் நான் சூரியனையே பார்க்கவில்லை. ஒரு சமயம் 24 மணிநேரம் சங்கிலியால் கட்டப்பட்டிருந்தேன் - என்று ஜோன்ஸ்ரன் விடுதலை யானதின் பின்னர் தெரிவித்தார்.

ஜோன்ஸ்ரனை விடுதலை செய்யும்படி உலகம் முழுவதும் உள்ள பல அமைப்புகளால் போராட்டங்கள் நடத்தப்பட்டன. இரண்டு லட்சம் பேர் கையெழுத்திட்ட மகஜர் ஒன்றும் அவரை விடுதலை செய்யுமாறு கோரி அனுப்பப்பட்டது. 2007ஆம் ஆண்டு மார்ச் 12ஆம் திகதி காஸா நகரில் அலன் ஜொன்ஸ்ரைன் தமது இருப்பிடம் திரும்பிக் கொண்டிருந்தவேளை இஸ்லாமிய இராணுவம் என்ற தீவிரவாத அமைப்பினால் கடத்திச் செல்லப்பட்டார்.

காஸா பகுதியைக் கடந்த மாதம் ஹமாஸ் அமைப்பின் பட்டா பிரிவினர் தீவிர வாதிகளிடமிருந்து கைப்பற்றினர்.

விடுதலையான ஜோன்ஸ்ரைன் பிரதமர் ஹனியாவுடன் பத்திரிகையாளர் முன் தோன்றினார். தமது விடுதலைக்காக பாடுபட்ட அனைவருக்கும் அவர் நன்றி தெரிவித்துக்கொண்டார். காஸா பகுதியை ஹமாஸ் அமைப்பு கைப்பற்றி அங்கு பாதுகாப்பைப் பலப்படுத்தத் தொடங்கியிருப்பது தமது விடுதலைக்கு உதவியதாக ஜோன்ஸ்ரைன் கூறினார். (ப)

# உலக இரட்சகர் தேவாலய திருப்பலி

யாழ்ப்பாணம்,ஜூலை5

உடுப்பிட்டி உலக இரட்சகர் தேவாலய வருடாந்த உற்சவத்தில் இன்று மாலை 4.30 மணிக்கு திருப்பலியும் நற்கருணை ஆசீர்வாதமும் நடைபெறும்.

நாளை காலை 7 மணிக்கு திருநாள் திருப்பலியைத் தொடர்ந்து திருச்சொரூப பவனி, ஆசீர், விருந்துபசாரம் ஆகியன இடம்பெறும். (1)

# கிழக்கில் அரசின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செயற்பாட்டுத் திறன்தான் உண்மையானதாக இருக்கமுடியும். கடந்த வாரம் அம்பாறைப் பகுதியில் எமது கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்குள் ஊடுருவ முயன்ற ஸ்ரீலங்கா அதிரடிப்படையினரைத் தாக்கி, எம்மவர்கள் படைச்சிப்பாயின் உடலையும் ஆயுதங்களையும் கைப்பற்றியிருக்கின்றனர்.

அம்பாறையைப் பிடித்து விட்டோம் என்று தம்பட்டம் அடித்துக் கொண்டிருக்கிற ஸ்ரீலங்காவினால் இது தொடர்பில் பதிலேதும் சொல்ல முடியாது. கிழக்கைப் பொறுத்தவரையில் ஒரு குறிப்பிட்ட பகுதியில் - தரையினில் தங்களது செல்வாக்கைச் செலுத்தலாம். மறுதரப்பினரால் எந்த ஒரு சம்பவமும் இல்லாத ஒரு சூழ்நிலையை அங்கே கொண்டுவருவது என்பது சாத்திய மற்றதாகும்.

### கிழக்குத் தந்திரோபாயம்

ஸ்ரீலங்கா அரசின் செய்திகளின் அடிப்படையிலும் கிழக்கிலும் நாங்கள் மேற்கொள்கிற தந்திரரோபாய நடவடிக்கைகளை அவ்வவ்போது சொல்லாத நிலையிலும் மக்களின் மனதில் ஒருவித அச்சம் ஏற்படுவது வழமைதான். ஆனால் ஒருவிடயம், கிழக்கில் இப்போதுள்ள படையணிகளின் எண்ணிக்கையை விட நாம் குறைவாக இருந்த காலத்திலும் எமது செயற்பாடுகள் இருந்தன. இப்போது ஒரு முழு ஒழுங்குபடுத்துதல் காலகட்டம் என்கிற அளவில்தான் நாம் தெரிவிக்க இயலும். ஆனால், ஸ்ரீலங்கா அரசும் இராணுவமும் கிழக்கிலே சாதிப்பதாகச் சொல்லுகிற விடயம் எவ்வளவு காலம் நீடிக்கும் என்பதை பொறுத்திருந்தான் பார்ப்போம்.

இந்திய அமைதிப்படை செய்ய இயலாததை ஸ்ரீலங்கா இராணுவம் செய்துள்ளது என்று கூறியிருக்கும் ஸ்ரீலங்கா பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாயவுக்கு வரலாறும் தெரியவில்லை- படைத்துறை வரலாறும் தெரியவில்லை. இந்திய ஆக்கிரமிப்புக் காலத்தில் தொப்பிக்கல என்று சிங்களப் பெயர் மூலம் அழைக்கப்படுகின்ற தூய தமிழ்ப் பகுதியான குடுமிமலைப் பகுதியில் இந்தியப் படையினர் முகாம் அமைந்திருந்தனர். இன்று வரை ஸ்ரீலங்கா இராணுவத்தால் அந்த இடத்துக்குச் செல்ல முடியவில்லை. எதைச் சொல்ல வருகிறார் என்று புரியவில்லை. கிழக்கில் ஸ்ரீலங்கா இராணுவத்துடன் சேர்ந்துள்ள குழுவினர் ஒன்றும் முதலாவது துரோகிகள் அல்லர். இதற்கும் முன்னர் துரோகிகள் அங்கிருந்தனர். அவர்கள் எதனைச் சாதித்தார்கள்? தமிழின உணர்வாளர்களை இவர்களால் காட்டிக்கொடுக்க முடியும். அவ்வளவுதான். படைப்பிரிவு ரீதியாக அக்குழுவினர் சாதிப்பார்கள் என சிங்களம் நினைத்தால் ஏமாந்துதான் போவார்கள். அவர்கள் துரோகிகள் - காட்டிக் கொடுப்பவர்கள் அவ்வளவுதான்.

## நாளை

| | |
|---|---|
| ஆனி - 22 | வெள்ளிக்கிழமை 06.07.2007 |
| திதி : ஷஷ்டி | பி.ப 01.18 |
| நட்சத்திரம் : | பூரட்டாதி பி.ப. 04.06 |
| சுபநேரம் | 05.58 - 07.28 |
| ராகுகாலம் | 10.28 - 11.58 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கனடாவின் அரச பிரதிநிதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பேணுமாறு அந்த நாட்டு அரசாங்கத்தின் மீது அழுத்தம் செலுத்த வேண்டும் - என்று நாடாளுமன்ற உறுப்பினர் மக்ரியாகு பிர தமரிடம் வலியுறுத்தியுள்ளார்.

கனடா, ஸ்காபரோ நகரத்தில் உள்ள பிக்கரிங் தொகுதியைப் பிரதிநிதித்துவம் செய்யும் நாடாளுமன்ற உறுப்பினரே மக்ரியாகு. இங்கு ஈழத் தமிழர்கள் பெரும் எண்ணிக்கையில் வாழ்கின்றனர். யாழ்ப்பாணக் குடாநாட்டில் உள்ள தமது உறவினர்கள் உரிய தேவைகளின் பொருட்டு கொழும்பில் உள்ள கனேடியத் தூதரகத்திற்குச் சென்று வருவதில் பெரும் கஷ்டங்களை அனுபவித்து வருவதாக அவர்கள் டான் மக்ரியாகுவிடம் தெரிவித்திருந்தனர்.

இதேவேளை -

இலங்கையில் மீண்டும் இரத்த ஆறு ஓடுகிறது. அதனை நிறுத்துவதற்கு இலங்கை அரசாங்கமும் தமிழீழ விடுதலைப் புலிகளும் உடனடியாகப் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் என்று கனேடிய வெளிநாட்டமைச்சின் நாடாளுமன்றச் செயலாளர் தீபக் ஒபராய் வலியுறுத்தியுள்ளார்.

இலங்கையின் சர்வதேச வர்த்தக அபி விருத்தி அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸுடன் நடத்திய சந்திப்பின்போதே ஒபராய் இதனைத் தெரிவித்தார்.

**இலங்கைக்கான உதவிகளை நிறுத்தக் கோரிக்கை**

கொக்ஸ்வில்லி நாடாளுமன்ற உறுப்பினர் அல்பினா குரொனெஸ்ரி நாடாளுமன்றத்தில் அறிக்கை ஒன்றைச் சமர்ப் பித்து உரையாற்றுகையில் -

தமிழ் மக்களின் மனித உரிமைகளை மதித்து அவர்களுக்குரிய அடிப்படை உரிமைகளை வழங்கும் வரைக்கும் இலங்கை அரசுக்கான உதவிகளை நிறுத்தி அந்த நாட்டுடனான வர்த்தகத்தைத் துண்டிக்க வேண்டும் - என்று காரசாரமாகப் பேசினார்.

**சமஷ்டி ஆட்சி முறைக்கு உதவவேண்டும்**

மேலும் -

ஜனாதிபதியின் திறைசேரி சபையின் செயலாளரும் கார்யெற்றொன் தொகுதி யின் எம்.பியுமான பெய்றி பொலிவர் கடந்த மாதம் வெளியிட்ட அறிக்கை ஒன் றில் -

கனடாவில் உள்ளது போன்றுசிறு பான்மை இன மக்களுக்கு சுயாட்சி மற் றும் உரிமைகளை வழங்கும் அதிகாரப் பரவலுடனான சமஷ்டி ஆட்சி முறையை இலங்கையில்உருவாக்குவதற்கு கனேடிய அரசு உதவவேண்டும் என்று வலியுறுத்தியிருந்தார்.

மூன்று லட்சம் ஈழத்தமிழர்களின் புகலி டமாக கனடா விளங்குகின்றது. இவர்களில் மிகப் பெரும்பாலானோர் ஸ்ரீலங்காவில் கடந்த இரண்டு தசாப்தங்களாக நடை பெற்றுவரும் இன வன்செயல்களால் தமது சொந்த வாழ்விடங்களை விட்டு இடம் பெயர்ந்தவர்கள் ஆவர். (அ)

## கண்காணிப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அலுவலக அதிகாரிகளுடன் சொல்பேர்க்கலந்துரையாடி நிலைமை களைக் கேட்டறிந்தார்.

அதன்பின் விடுதலைப் புலிகளின் சமா தானச் செயலகப் பணிப்பாளர் நாயகம் எஸ்.புலித்தேவனைச் சந்தித்த அவர் தற்போதைய நிலைமை குறித்து ஆராய்ந்தார். மோசமாகிவரும் களநிலைமைகள் குறித்து புலித்தேவன் அவரிடம் எடுத்துக்கூறினார்.

கிளிநொச்சியில் தங்கியுள்ள அவர் இன்று கொழும்பு திரும்புவார். (அ-1)

## துணிச்சலான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தூய்மையானதும் கூட. அதேபோன்று யாழ்ப்பாணத்தில் ஊரடங்கு நேரத்தில் நடமாடுபவர்கள் எவரானாலும் அவர்களை உடனடியாகக் கைது செய்யும்படி பாதுகாப்புப் பிரிவினருக்கு வழங்கியுள்ள கண்டிப்பான உத்தரவு பாராட்டத்தக்கது.

கொழும்பில் தமிழர்கள் செறிந்து வாழும் கொட்டாஞ்சேனை, வெள்ளவத்தை போன்ற பிரதேசங்களில் தேடுதல் என்ற பெயரில் தமிழ் மக்கள் மீது திணிக்கப்படும் கெடுபிடிகள் தொடர்பாகவும் உயர் நீதிமன்றம் இவ்வாறான உத்தரவுகளைப் பிறப்பிக்க வேண்டும்.

**நீதித்துறைக்கு வலுவூட்ட வேண்டும்**

இன்று சட்டமும் ஒழுங்கும் இல்லாமல் போய்விட்டன. அடிப்படை மனித உரிமை மீறல்கள் அப்பட்டமாக இடம் பெறுகின்றன. நிர்வாகத்துறை நித்திரை கொள்கின்றது. இங்கு எம்மைப் பாதுகாக்க நீதித்துறை மட்டுமே இருக்கின்றது. அதற்கு மேலும் வலுவூட்ட வேண்டும்.

நீதிபதிகளின் எண்ணிக்கையை 60 ஆக அதிகரிக்கும் திட்டத்தை நாம் வரவேற்கின்றோம். இப்படியான நியமனங்கள் வழங்கப்படும்போது தகுதியும், தராதர மும், நேர்மையும் உள்ளவர்கள் தெரிவு செய்யப்பட வேண்டும்.

யாழ்ப்பாணத்திலுள்ள ஒரு நீதிவான் விசேடமான முறையில் செயல்படுகின்றார். இவருடைய கார் வரும்போது எதிரே யாரும் வர முடியாது. இவருடைய காரை வேறு வாகனங்கள் கடந்து செல்ல முடி யாது. குறுக்குப் பாதைகளில் இருந்து பிரதான பாதைக்கு வர முடியாது. இவருடைய கார் செல்லும் வரை அனைத்தும் அப்படி அப்படியே இருக்கவேண்டும். மீறினால் அவர்கள் நீதிமன்றத்திற்கு அழைக்கப்படுகின்றனர்.

இவ்விடயம் தொடர்பாகவும் உயர் நீதிமன்றமும் பிரதம நீதியரசரும் அவதானம் செலுத்த வேண்டும்.

**அல்லைப்பிட்டிக் கொலை வழக்கை ஊர்காவற்றுறைக்கு மாற்றவேண்டும்**

அல்லைப்பிட்டியில் 13 பேர் கொலை செய்யப்பட்ட வழக்கு ஊர்காவற்றுறை நீதிமன்றத்தின் முன்னிலையிலேயே விசா ரணை செய்யப்பட்டது. ஆனால் இவ் வழக்கு இப்போது யாழ். நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டது ஏன்? இதனை மீண்டும் ஊர்காவற்றுறை நீதிமன்றத்திற்கு மாற்ற வேண்டும்.

மூதூரில் 17 தன்னார்வத் தொண்டர்கள் படுகொலை தொடர்பாக விசாரணை களை நடத்திய நீதிவான் இப்போது இட மாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

எனவே நிர்வாகத்துறையினரின் அடாவடித்தனங்களுக்கு நீதித் துறை முற்றுப் புள்ளி வைக்க வேண்டும். -எனவும்சிறிகாந்தா கோரிக்கை விடுத்தார். (சி)

## வெளிவிவகார...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இயன்ற அனைத்து உதவிகளையும் வழங்கும் என்றும் நாராயணன் வலியுறுத் தினார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இச்சந்திப்பை முடித்துக் கொண்டு இந்திய அமைச்சர் சரத்பவரையும் அவர் சந்தித்தார் எனத் தெரிவிக்கப்படுகிறது. (சி)

## கடத்தல்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்னாள் விமானப்படை அதிகாரி ஒருவர், அவ ருடன் ஒரு விமானப்படை உத்தியோகஸ்தர், நான்கு பொலிஸ் அதிகாரிகள் ஆகியோர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களு டன் இதர 10 பேரையும் நாம் கைதுசெய் துள்ளோம். இவர்களில் நால்வர் முஸ் லிம்கள். விசாரணைகள் நீடிக்கின்றன'' - என அவர் விவ ரித்தார். (சி)

## கரும்புலிகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பஸ்களில் பயணம் செய்த பயணிகள் அனைவரும் இறக்கப்பட்டு அடையாள அட்டைச் சோதனைக்கும் உடற் பரிசோதனைக்கும் உட்படுத்தப்பட்டனர்.

**யாழ்.நகரப் பகுதியில்**

யாழ்.நகரப் பகுதியிலும் நேற்று தீவிர சோதனை நடவடிக்கைகள் மேற்கொள் ளப்பட்டன. யாழ்.நகருக்கு வரும் அனைத்து வீதிகளிலும் நேற்று படையினரும் பொலிஸாரும் குவிக்கப்பட்டு சோதனைகள் நடைபெற்றன. நகருக்குள் நுழைவோரும் நகரை விட்டு வெளியேறுவோரும் படையினரின் சோதனை நடவடிக்கைகளில் இருந்து எவரும் தப்பவில்லை.

இதேவேளை -

பல இடங்களில் நேற்றுச் சுற்றிவளைப்பு தேடுதல் நடவடிக்கைகளும் இடம் பெற்றன.

**சுற்றிவளைப்பு**

வலி.மேற்கில் சில்லாலை மற்றும் சாந்தைக் கிராமங்கள் நேற்று அதிகாலை முதல் படையினரால் சுற்றிவளைக்கப்பட்டுத் தேடுதல் மேற்கொள்ளப்பட்டது. அத்துடன், வடலியடைப்புப் பகுதியில் நேற்று மூன்றவாது நாளாகவும் தேடுதல் நடைபெற்றது.

படையினரால் பெரும் எடுப்பில் மேற்கொள்ளப்பட்ட இந்தத் தேடுதல் நடவடிக்கை காரணமாக வீதிகளில் சனநடமாட்டம் வெகுவாகக் குறைந்து காணப்பட்டது.

(அ-50-51-29-135)

## முன்பள்ளி ஆசிரியர்கள் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஜூலை 5

தென்மராட்சிப் பிரதேச முன்பள்ளி ஆசிரியர்களுக்கான கலந்துரையாடல் இன்று பி.ப ஒரு மணிக்கு சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் நடைபெறும்.

முன்பள்ளி ஆசிரியர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் கேட்டுள்ளார். (1-207)

## குடும்பத்துடன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ நாட்டை விட்டு வெளியேறிவிட்டார் என்று கொழும்பில் செய்திகள் வெளியாகியிருக்கின்றன.

அவர் தனது பாதுகாப்புக் கருதி நாட்டை விட்டு வெளியேறி வெளிநாடு சென்றுவிட்டார் என்று ஊடகச் செய்திகள் தெரிவிக்கின்றன. (சி)

## தமிழ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நோர்வேயில் சர்வதேச விவ கார அமைச்சர் எரிக் சொல்ஹெய்மைச் சந்தித்த இந்தக் குழுவினர் இன்று அங்கிருந்து புறப்படுகின்றனர்.

சுவீடனில் சந்திப்பை முடித்துக் கொண்டு அவர்கள் சர்வதேச ஜனநாயக மற்றும் தேர்தல் உதவி நிறுவனத்தின் பொதுச் செயலரும் நோர்வேயின் முன்னாள் வெளிவிவ கார அமைச்சருமான விடார் ஹெல்கிஸனையும் சந்திக்கவுள்ளனர்.

இச்சந்திப்பு நாளை இடம்பெறவுள்ளது. தொடர்ந்து டென்மார்க்கிற்கு விஜயம் செய்யும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் அங்கு வெளிவிவகார அமைச்சின் ஆசிய பசுபிக் பிரிவின் தலைவரைச் சந் திக்கவுள்ளனர்.

இதனையடுத்து பின்லாந்திற்கும் இக் குழு விஜயம் செய்யவுள்ளது.

இக்குழுவில் நாடாளுமன்ற உறுப்பினர்களான ஆர்.சம்பந்தன், கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செல்வம் அடைக்கல நாதன், சுரேஷ் பிரேமச்சந்திரன், மாவை சேனாதிராஜா ஆகியோர் அடங்குவர். (அ-203)


**அறிவொளி-நல்லூர்**

விலங்கியல்: T.பாலகிருஷ்ணன்

A/L 08 Thur, Fri 4 p.m.

A/L 09 Thur, Fri 5 p.m.

கணக்கீடு : Mr.இராகுல்

A/L 08 Sat,Sun3.30 p.m.

A/L 09 Sat,Sun4.30 p.m.

பொருளியல்: R.அருணன்

A/L 09 Sat,Sun3.30 p.m.

A/L 08 Sat,Sun4.30 p.m.

பொது. O/L சிங்களம் M.ரோலன்.

Sat,Sun 2.30 p.m.

**பௌதிகவியல்**

HEAT

ஆரம்பம்: 07.07.2007

சனி காலை 6.30

Sat,Sun6.30-7.30 a.m.

By: K.Selvan

**நாவலர்**

ஆனைப்பந்தி, யாழ்.நகர்.

**பொருளியல்**

**P.S.குமார்**

**மாபெரும் கருத்தரங்கு**

* 8 பாடங்களிற்கும் தனித்தனிப் பாடக்குறிப்புகள்
* நடைமுறை விடயங்கள்
* கணக்குகள் வரைபடங்கள்

12, 17, 20, 24, 25 ஆம் திகதிகளில்

குறிப்பு: வெளிமாணவர்கள் 11ஆம் திகதிக்கு முன்னர் அனுமதிகளைப் பெற்றுக் கொள்ளவும்.

இடம்: **பொருளியற் கல்லூரி, யாழ்ப்பாணம்.**

**பரீட்சை வினாத்தாள்**

தரம் 1 முதல் O/L வரை

2ஆம் தவணைக்கான பரீட்சை வினாத்தாள்கள், 09.07.2007 முதல் வெளிவிடப்படும். வினாத்தாள் தேவையானோர் 07.07.2007இற்கு முன் பதிவு செய்யவும்.

**நாவலர்** இன்ஸ்ரிரியூட்
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

**நீங்கள் எதிர்பார்த்த இலக்கினை இலகுவில் அடைவதற்கான வழிகாட்டல் கருத்தரங்கு**

**தமிழ் : திரு. குழந்தை**

இம்மாதம் 12, 13ஆம் திகதிகளில் பி.ப 3 மணி முதல் 5 மணிவரை

* முற்றிலும் எதிர்பார்க்கை வினாக்களுடன் கூடிய கருத்துரை
* வெளிமாணவர்களும் கலந்துகொள்வதற்கான வாய்ப்பு
* பதிவுகள் 10.07.2007 (செவ்வாய்) வரை ஏற்றுக் கொள்ளப்படும்.

குறிப்பு: இறுதிநேர நெருக்கடியினை தவிர்க்க பதிவுகளை உடன் மேற்கொள்ளவும்.

**ACA** கோயில்வாசல், கே.கே.எஸ். வீதி, இணுவில்.


## நன்றி அறிவித்தல்

வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகக் கொண்ட எனது தந்தை **கணபதிப் பிள்ளை சின்னத்தம்பி** நேற்று (04.07.2007) புதன்கிழமை திடீரென இறைபதம் எய்திய செய்தி அறிந்து அக்கிரியைகளில் கலந்து கொண்டு-அனுதாபம் தெரிவித்ததோடு, ஆறுதல் கூறிய அனைவருக்கும் உளமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**சி.ஜெயக்குமார்** (ஆசிரியர்-யா/ கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயம்),

**திருமதி லோ.ஜெயக்குமார்** (ஆசிரியை- கோப்பாய் சரபவானந்த வித்தியாலயம்).

121/A, பருத்தித்துறை வீதி,
நல்லூர்.

## மரண அறிவித்தல்கள்

### திருமதி வேதநாயகம் கந்தையா

அராலி மத்தியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி வேதநாயகம் கந்தையா நேற்று (04.07.2007) புதன்கிழமை காலமானார்.

அன்னார் மலேஷியாவில் காலஞ்சென்ற தபால்அதிபர் பொன்னம்பலம் கந்தையாவின் அன்பு மனைவியும் கணேசன், சிவமணியன் ஆகியோரின் பாசமிகு தாயும் சிவசுப்பிரமணியம், தவமணியின் பாசமிகு மாமியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.07.2007) வியாழக்கிழமை நடைபெற்று, பூதவுடல் புறாவோடை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
**க.கணேசன்**
(மகன்)

### திருமதி நேசம்மா அப்புத்துரை


சபாபதி வீதி, கொக்குவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் அம்பகர் வீதி, கொக்குவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அப்புத்துரை நேசம்மா 03.07.2007 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

அம்பகர் வீதி,
கொக்குவில்.
தொ.பே: 021 222 5420 (62466)

தகவல்:
**த.நீலாம்பிகை**
(சகோதரி)

### பிலிப்பையா மரியநாயகம்



இளவாலை, கோவிந்தபுலத்தைப் பிறப்பிடமாகவும் கனடா, ரொறன்ரோவை வசிப்பிடமாகவும் கொண்ட பிலிப்பையா மரியநாயகம் 01.07.2007 சனிக்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற திரு.திருமதி. பிலிப்பையா நட்சத்திரம் தம்பதியரின் அன்பு மகனும் திருமதி பற்றிமாவின் அன்புக் கணவரும் யஸ்ரின், ஜெயந்தன், பபா, நிஷா, றொசானி ஆகியோரின் பாசமிகு தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிச்சடங்கு 07.07.2007 சனிக்கிழமை மு.ப. 10 மணியளவில் கனடாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

பிரதான வீதி,
இளவாலை.

தகவல்:
**அந்தோனிப்பிள்ளை குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்கள்

### செல்லப்பா இராசரத்தினம்

(ஓய்வு பெற்ற சாரதி- இ.போ.ச)



உரும்பிராய் வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்லப்பா இராசரத்தினம் நேற்று (04.07.2007) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லப்பா-தங்கம்மா தம்பதியரின் அன்பு மகனும் ஞானசக்தியின் அன்புக் கணவரும் இராசரத்தினம் - நாகம்மா தம்பதியரின் மருமகனும் ராஜமோகன் (லண்டன்), ஞானகலா, காலஞ்சென்றவர்களான ராஜகுமார், இராயேந்திரன் மற்றும் ஞானபவானி (ஜேர்மனி), ஞானவதனி (சுவிஸ்), ஞானவசந்தா ஆகியோரின் அன்புத் தந்தையும் தங்கராஜா, ரவீந்திரன், சர்வேந்திரன், சந்திரவதனி, கிருபாகரன் ஆகியோரின் மாமனும் சுமித்திரா, நிர்மலா, மயூரா, அகர்ஷனன், ரஜீவன், சிந்துஜா, விதூர்ஷன், விஸ்னுகா, விணோக், கேனுஷன், கோபிஷன், ஹருஷனன், பிருந்திகன் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (04.07.2007) புதன்கிழமை நடைபெற்றன.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

உரும்பிராய் வடக்கு,
உரும்பிராய்.

தகவல்:
**குடும்பத்தினர்.**

### செல்லப்பா சுப்பிரமணியம் (சிறாப்பர்)



271/10, கச்சேரி நல்லூர் வீதியைப் பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட செ.சுப்பிரமணியம் லண்டனில் 04.07.2007 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லப்பா - காமாட்சி தம்பதியரின் செல்வப் புதல்வனும் அமரரான கணபதிப்பிள்ளை, அமரரான மாணிக்கம், திருநமசிவாயம் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரனும் முரளீதரன் (லண்டன்), ஜெகதீஸ்வரன் (லண்டன்), யோகேஸ்வரன் (கனடா), யசோதரன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் கம்ஷ, புஸ்பா, சிவாஜினி, ஜானகி ஆகியோரின் அன்பு மாமனும் குணசுகி, சிந்தியா, பிரசாந், ரூபி, வைஸ்ணவி, வைதேகி, நேத்திர, விதுசன், அனுசன், தீபிகா ஆகியோரின் பேரனும் சஞ்சீவன், பிரவிக்கா ஆகியோரின் பாட்டனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 08.07.2007 ஞாயிற்றுக்கிழமை லண்டனில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

271/10, கச்சேரி நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
**தனேந்திரன் குணசுகி.**

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 05.07.2007இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org